Sri Lanka Judges Institute

# இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

நீதித்துறையின் தரத்தை மேம்படுத்துவதற்காக
அர்ப்பணிக்கப்பட்டுள்ளது

## 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

**1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு ஏற்ப பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது**

# உள்ளடக்கம்

1. எமது தொலை நோக்கு / எமது பணிநோக்கு………………………….. 3-4
2. பணிப்பாளரின் கூற்று ……………………………………………………5-6
3. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைப்பற்றி ………………………………7
4. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இஸ்தாபிப்பு…………………….. 8
5. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாறு…………………………. 8-17
6. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை மற்றும் ஊழியர்கள் …….. 17
7. நிறுவகத்தின் நிதிகள் ……………………………………………………20-21
8. பயிற்சி நிகழ்ச்சிகள் ……………………………………………………21-29
9. 2013 ஒரு பார்வை…………………………………………………….. 30
10. 2013இல் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகள்……….. 31-32
11. அதிதி விரிவுரையாளர்கள்…………………………………………… 32-34
12. ஆய்வுச் செயற்பாடுகள்……………………………………………….. 35-38
13. சர்வதேச உறவுகள்……………………………………………………. 39-40
14. எதிர்கால பாடநெறிகள்……………………………………………….. 41
15. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ………………………………41
16. நன்றிகள்……………………………………………………………… 41
17. ஐந்தொகை…………………………………………………………… 42
18. வருமான செலவினக் கணக்கு………………………………………….. 44
19. நிதிப்பாய்ச்சல் கூற்று ……………………………………………………45-47
20. நிலையான சொத்துக்கள்……………………………………………….. 47
21. 2013ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளரின் அறிக்கை ……………... 48-53

# எமது தொலை நோக்கு

நீதித்துறைப் பயிற்சி மற்றும் நம்பத்தகுந்த, பக்கச்சார்பற்ற, சுதந்திரமான, பயனாளிகள் நட்புடனான மற்றும் அனைவரும் அனுகக்கூடிய ஒரு நீதித்துறை முறைமையை அடைந்து கொள்வதற்கு நீதிபதிகளின் துறைசார் வான்மையை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவு விருத்தி ஆகியவற்றை நோக்காகக் கொண்டு நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த பயிற்சிகளையும் ஆய்வு வசதிகளையும் வழங்குவதற்காக மிகச்சிறந்த ஒரு நிறுவனமாக நாம் சேவையாற்றுவோம்.

## எமது பணிநோக்கு

நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வான்மை மற்றும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளினூடாக நீதித்துறையின் தரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு நீதித்துறை அலுவலர்களுக்கு உயர் அறிவு மற்றும் திறன்களை வழங்குதல் மூலம் எமது தொலை நோக்கை அடைந்து கொள்வதற்கு நாம் பணியாற்றுவோம்.

## 2. பணிப்பாளரின் செய்தி



இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபையின் சார்பாக, **2013** டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த வருடத்தில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நடவடிக்கைகள் பற்றி வரையப்பட்ட முடிவுகள், வாய்ப்புக்கள் மற்றும் தரப்பட்ட எதிர்கால ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகளின் நிதியியல் இயலுமை, கடந்த வருடத்தில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயலாற்றுகையின் வரைபட ரீதியான பட்டியல் என்பவற்றை கோடிட்டுக் காட்டுகின்றது. அது நிறுவகத்தின் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை சிறந்த சாத்தியமான வழியில் எவ்வாறு அடையப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

நீதிபதிகளின் துறைசார் விருத்திக்காக நீதித்துறை பயிற்சியளித்தலை தொடர்கின்ற அதேநேரம் அவர்களின் அறிவை மேம்படுத்தும் செயற்பாடுகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பாராளுமன்ற சட்டமொன்றினால் 1986ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதிலிருந்து நீண்ட காலமாக இருந்து வருகின்றன. நிறுவகத்தின் கல்விசார் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி மற்றும் நீதிபதிகள் துறைசார் வல்லமைகளை மேம்படுத்துவதற்கும் நீதித்துறை நிருவாகத்தில் அவர்களின் அறிவை உயர்த்துவதற்கும் நோக்காகக் கொண்டு பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளில் நீதித்துறை அலுவலர்களுக்கு முக்கிய சேவை வழங்குனராக நாமாகவே எம்மை தயார்செய்தல் என்பவை காரணமாக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திற்கான மாற்றத்தின் வருடமாக 2013 ஆம் ஆண்டு இருந்தது.

ஐந்து பாரிய அபிவிருத்திகளை கவனத்தில் கொண்டு, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் ஒரு முக்கிய காலகட்டமாக கடந்த வருடம் இருந்துள்ளது. முதலாவது, ஜனாதிபதி சட்டத்தரணியும் பிரதம நீதியரசருமான கௌரவ மொஹான் பீரிஸ் அவர்களின் வேண்டுகோளில் நீதி அமைச்சின் புதிய கட்டடத்தின் 5 ஆம் மாடியில் நிறுவகத்தின் செயலகத்தின் பாவனைக்காக ஒரு பகுதி வழங்கப்பட்டது. இரண்டாவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் சவால் மிகுந்த வருடமாக இருந்தது. மூன்றாவது நிறுவனத்தில் தொழிநுட்பத்தின் பாவனைக்கான கேள்வி, குறிப்பாக இணையத்தளத்தை ஆரம்பித்தல் மற்றும் பிரதம நிதியரசரின் அலுவலகம், யாழ்ப்பான மேல் நீதிமன்றம் மற்றும் தங்காலை மேல் நீதிமன்றம் ஆகியவற்றுடன் நிறுவனத்தை இணைக்கின்ற காணொலி மாநாட்டு (video Conferencing) வசதியை தாபித்தல். நான்காவதாக, நிறுவனத்தின் ஊழியர்களுக்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்குதல். ஐந்தாவதாக, மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நீதிபதிகள் நிறுவகத்துக்கு ஆலோசகர் ஒருவரை நியமித்தல்.

2013 ஜுன் - 2013 டிசம்பர் கால கட்டத்துக்கான செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான உபாய இலக்குகளை அமுல்படுத்தலும் முன்னுரிமை கருத்திட்டங்களை அடையாளம் காணுதலிலும் 2013 ஜுன் - 2013 டிசம்பர் வரை கடந்த வருடத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்காக சேவைக்காலபயிற்சியை நடாத்துவதற்கு முன்னுரிமைகள், நீதிபதிகளுக்கு சட்டத்தகவல்கள் மற்றும் சட்டப் பொருட்கள் வழங்குவதன் மூலம் இணைய அடிப்படையிலமைந்த கல்வி, நிறுவகத்தின் இ-நூலகத்தில் அறிக்கையிடப்படாத தீர்ப்புக்கள் மற்றும் பயிற்சி நெறிக்கான பொருட்களை அச்சிட்டு வெளியிடுதல், வெளிநாட்டு நீதிபதிகளினால் விசேட விரிவுரைகளை

நடாத்தல், பல்கலைக்கழக நிறுவனங்கள், சட்ட வல்லுனர்கள் மற்றும் ஏனைய துறைசார் வல்லுனர்களினால் விரிவுரைகளை நடாத்தல், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தைத் திருத்துதல், நிறுவகத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தைத் தயாரித்தல், சேவைக்காலநீதித்துறை அலுவலர்களுக்கான நீண்டகால பயிற்சிக் கைநூலை விருத்தி செய்தல், வெளிநாட்டு நீதிபதிகள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களுடன் உறவுமுறைகளை மேம்படுத்தல், சர்வதேச நீதித்துறைப் பயிற்சி அமைப்பில் (IOJT) உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளல் மற்றும் நீதிபதிகளுக்கு வெளிநாட்டு பயிற்சிகளை ஒழுங்கு செய்தல் போன்றவற்றுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஊழியர்களின் குறைபாடு காரணமாக குறிப்பாக ஒரு தகுதிவாய்ந்த நூலகர் ஒருவர், தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் ஏனைய ஆதரவு வழங்குகின்ற ஆள் போன்றோர்கள் நிறுவகத்தின் கல்விசார் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. நீதித்துறை அலுவலர்களுக்கு மிகவும் செயற்திறனான சேவை ஒன்றை வழங்குவதற்கு 2014 இல் தேவையான ஊழியர்களை நியமிப்பதற்கான சகல சாத்தியமான நடவடிக்கைகளை நிறுவகம் மேற்கொள்ளும்.

முகாமை சபை உறுப்பினர்கள் மற்றும் பல ஏனைய ஆட்களின் ஆதரவு காரணமாக கடந்த வருடத்தில் நிறுவகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சாத்தியமாக இருந்தது. முதலாவது, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபைத்தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணியும் பிரதம நீதியரசருமான கௌரவ மொஹான் பீரிஸ் அவர்களுக்கும் சபையின் ஏனைய அங்கத்தவர்களான கௌரவ காமினி அமரதுங்க (2013 ஆகஸ்ட் வரை), கௌரவ சிராணி திலகவர்தன (2013 ஆகஸ்ட் இலிருந்து) மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கௌரவ சலீம் மர்சூப் ஆகியோருக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என்பதோடு அவர்களின் தொலைநோக்கு, மனோதிடம் மற்றும் வழிகாட்டல் இல்லாவிட்டால் எந்தவொரு சாதனையையும் அடைந்துகொண்டிருக்க முடியாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

எமது ஆலோசகரான மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கௌரவ ரஞ்சித் ரணராஜா அவர்களின் சுறுசுறுப்பான ஆதரவுக்கும் மற்றும் இலங்கை நீதிபதிகளின் நீதித்துறைக் கல்வியின் முன்னேற்றத்துக்கு பெருமளவாக பங்களிப்புச் செய்த சகல வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி தி சில்வா மற்றும் அவரின் கீழ் உள்ள ஊழியர்கள் குறிப்பாக நிருவாக மற்றும் கணக்கீட்டு அலுவளர்களினால் வழங்கப்பட்ட இதயசுத்தியுடனான ஆதரவை இங்கு குறிப்பிடாவிட்டால் எனது கடமை தவறியவனாக நான் மாறுவேன் என்பதோடு அவர்கள் அனைவருக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த வருடத்தில் இந்த செயலாற்றுகைகளை அடைந்து கொள்வதற்கு எமது நிறுவகத்தில் உள்ள ஊழியர்களின் ஆதரவினால்தான் அடைந்து கொள்ள முடிந்தது. பல ஊழியர்கள் அவர்களின் பல சிறமங்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உற்சாகமாக வேலை செய்தனர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலர்களின் அர்ப்பணிப்பான முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்வரும் வருடத்தில் திடகாத்திரமாக வளர்வதற்கு நாங்கள் உறுதிபூணுகிறோம்.

ருவான் பர்னான்டோ
எல்.எல்.எம் (கார்டிப்), பிரித்தாணியா, புலமைச் சொத்து உரிமைகள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா(இலங்கை)
மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும் பணிப்பாளர், இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
02.05.2014

## 3. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் சம்பந்தமானது.

பின்வரும் இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அதன் **பணிநோக்கை** பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

- நீதித்துறை அலுவலர்களுக்கு தொடர்ந்தேர்ச்சியான பயிற்சியை வழங்குதல்;
- ஆய்வு, வெளியீடுகள் மற்றும் தொழிநுட்ப உதவி என்பவற்றினூடாக நீதித்துறை அலுவலர்களுக்கு ஆதரவு வழங்கள்;
- நீதித் துறை அலுவலர்களினால் நீதி மற்றும் சட்ட விவகாரங்களின் மீது கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பரிமாற்றிக் கொள்வதற்கான வசதிகளை வழங்கள்;
- நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தல்;
- வழக்கு முகாமை மற்றும் வழக்குப்பாய்ச்சல் முகாமை முறையில் தாமதத்தைக் குறைப்பதில் சிறந்த நடைமுறைகளுக்காக வழிகாட்டல் கைநூலை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்;
- நீதித்துறை நிருவாகத்தின் பல்வேறு பிரிவுகளின் மீது ஆய்வுச் செயற்பாடுகளை நடாத்துதல்;

- நீதிபதிகளுக்கு நூலக மற்றும் இணைய அடிப்படையிலான கல்வி வசதிகளை வழங்குவதோடு சட்டத் தகவல்களையும் அதற்கான பொருள்களையும் வழங்குதல்;
- சர்வதேச நீதித்துறை நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணல்.
- நீதித்துறை முறைமையில் பொது மக்கள் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் நிலைநிறுத்துவதற்காக வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பரிகாரம் வழங்குவதனூடாக சட்ட மறு சீரமைப்புக்களுக்குப் பங்களிப்புச் செய்தல்;
- நீதி நிருவாகம் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் படிமுறைகள் மற்றும் நீதிக்கான அனுகுவழி போன்றவை தொடர்பான விருத்திக்கும் அமுல்படுத்தலுக்கும் பங்களிப்புச் செய்தல்;

## 4. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இஸ்தாபிப்பு

1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க "இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டம்" என்ற தலைப்பில் பாராளுமன்ற சட்டம் ஒன்றினால் நீதிபதிகள் நிறுவகத்தை உருவாக்குவதற்காகவும் அதனுடன் தொடர்புடைய கருமங்கள் அல்லது அதன் இடைநேர்விளைவுகளுக்காக இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தாபிக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபிப்பதற்கான குறிக்கோள்கள் பின்வருமாறு.

1. நீதித்துறை அலுவலர்களினால் நீதித்துறை மற்றும் சட்ட விடயங்கள் மீதான கருத்துக்கள், ஆலோசனைகளைப் பரிமாறுவதற்கான வசதிகளை வழங்குதல்;

2. நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தல்;

3. நீதி நிருவாகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி மற்றும் ஆய்வுக் கற்கை நெறிகளை உருவாக்கி நடாத்துதல்; மற்றும்

4. நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்விசார் பொருட்களையும் வழங்குதல்.

## 5. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாறு

இலங்கை நீதித்துறை அலுவலர்களுக்காக நீதித்துறை கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதிலும் அவர்களின் துறைசார் தரங்களை மேம்படுத்துவதிலும் இலங்கையில் உள்ள ஒரேயொரு நீதித்துறை நிறுவனம் என்ற வகையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அரிய உயர்தரத்தைக் கொண்டுள்ளது.

நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதற்கு முன்னர், புதிய நீதிபதிகள் அவர்களின் கடமைகளை ஏற்பதற்கு முன்னர், நீதிமன்ற அமர்வுகளில் தலைமை தாங்குகின்ற நீதிபதியின் கீழ் நீதிமன்ற அமர்வுகளைப் ஒரு சில வாரங்களுக்கு அவதானிக்கும் செயற்பாடு மாத்திரமே நீதித்துறை அலுவலர்களுக்கு இருந்த ஒரேயொரு பயிற்சியாக இருந்தது. நீதித்துறையை நிருவகிக்கின்ற நீதிபதிகள் அவர்கள் தமது நீதித்துறை தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாத்திரமல்லாமல் அவர்களின் நீதித்துறை தொழில் புரிகின்ற காலம் முழுவதும் ஒரு தொடர் செயன்முறையாக இருக்க வேண்டும் என பலமாக உணரப்பட்டது. நீதித்துறை அலுவலர்களுக்காக ஒரு வழமையான பயிற்சியை வடிவமைத்து வழமையான அடிப்படையில் சகல மட்டங்களிலும் உள்ள நீதித்துறை அலுவலர்கள் நீதித்துறைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைப்பதற்கு ஆழமாக அப்போது உணரப்பட்டது.

இந்த எண்ணம் முதன் முதலில் அப்போதைய நீதியமைச்சின் செயலாளராக இருந்த திரு P.B.ஹேரத் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. அவர் பிரான்ஸ் நாட்டில் அத்தகைய நிறுவனமொன்றை அவதானித்த பின்னர் 1982 இல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். ஆனால், வழமையைப் போன்று அது பற்றி எதுவும் நடக்கவில்லை என்பதோடு அது செவிடன் காதில் ஊதிய சங்கைப்போன்று ஆகிவிட்டது. நீதியமைச்சின் செயலாளராக திரு P.B. ஹேரத் அவர்கள் நீதிபதிகள் நிறுவகத்தைப் பற்றி முதலில் சிந்தித்து, நிறுவகத்துக்கான ஊக்குவிப்பு கற்கை மூலத்தை சிந்தித்து நிறுவகத்தின் ஒரு மிகப் பலமான துணையாக மாறினார்.

சுமார் 1983 செப்டம்பரில், ஆற்றல்வாய்ந்த கலாநிதி A.R.B. அமரசிங்க அவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கும், உயர் நீதிமன்றத்தில் ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், நீதியமைச்சின் செயலாளராக பொறுப்பேற்றுக் கொள்வதற்கு நீதியமைச்சுக்கு இயலுமாக இருந்தது. 1984 இன் இறுதிவரை அப்போதைய பிரதம நீதியரசர் திரு D.M.நெவில்லே அவர்கள் இருந்தார்கள் என்பதுடன் அப்போதைய பிரதம நீதியரசர் மற்றும் அப்போதைய நீதியமைச்சின் செயலாளர் கலாநிதி A.R.B.அமரசிங்க அவர்களுடனும் ஒரு கலந்துரையாடலுக்காக உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்து அப்போதுதான் ஓய்வு பெற்றிருந்த நீதிபதி J.F.A. சோசா அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

நீதிபதிகளுக்கான சேவைக்காலதொடர் சட்டக் கல்வி ஏற்பாட்டுக்காக, நீதிபதி நிறுவகத்தை உருவாக்குவதற்கான கருத்தை ஒன்றிணைந்து முன்வைத்தனர் என்பதோடு நீதிபதி 1984 மே 02 ஆம் திகதி J.F.A. சோசா அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆசியா பவுன்டேசன் வதிவிடப்பிரதிநிதி திரு ஜோன் கயர் அவர்களுடன் நிதியீட்ட வினா தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டிருந்தது. புதிய நிறுவகத்தின் கட்டடத்துக்கான வளவைத் தேடுவது முதலாவது விடயமாக இருந்தது. பல மாற்றுவழிகளை அவதானித்த பின்னர் ஒரு வருட வாடகைக்காக இலங்கை மன்றத்தின் ஒரு பகுதி பெறப்பட்டது. அதனை திருப்பி ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆசியா பவுன்டேசன் நிறுவனத்தின் தாராளத்தன்மையினாலே இவையெல்லாம் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் சில கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன ஆனால் அதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததால் நிமித்தமுறை நிகழ்ச்சிகள் மாத்திரம் நிகழ்த்தப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டது, ஆனால் அதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைப்பதற்குரிய தெளிவிருக்கவில்லை.

நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பது தொடர்பான செயல்பாடு தாமதிக்கப்பட வேண்டுமென 1985 இன் ஆரம்பகட்டத்தில் ஒரு வழிகாட்டல் கிடைத்தது. அதன்பின்னர் விடயம் தொடர்பான சட்டவாக்கத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேநேரம் அமைச்சரவை கருத்துக்கேற்ப, கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதற்கு நீதிசேவை ஆணைக்குழு பொறுப்பேற்றுக்கொண்டது. 1985 நொவம்பரில் அத்தகைய ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு பிணை தொடர்பான கருத்தரங்கில் நீதிபதி J.F.A. சோசா அவர்கள் தலைமை தாங்குவதற்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பதோடு நாட்டின் சிறந்த சட்டத்தரணிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பின்வருவோர் இருந்தனர் கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா, திரு A.H.C. டி சில்வா அரச சட்டத்தரணி மற்றும் சட்டமா அதிபதி திணைக்களத்திலிருந்து அப்போதைய சட்டமா தலைமை அதிபதி திரு சுனில் டி சில்வா, கௌரவ ராமநாதன் பின்னர் அவர் உயர் நீதி மன்ற நீதிபதியாக மாறினார் மற்றும் கௌரவ ப்ரியந்த பெரேரா பின்னர் அவர் உயர் நீதிமன்ற நீதிபதியாக மாறினார்.

சில சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன என்பதோடு நிகழ்த்தப்பட்ட போதனைகள் உயர் தரத்தில் அமைந்திருந்தன. அதிதிப் பேச்சாளராக ஆசிய பவுன்டேசன் நிறுவனத்தின் சட்ட முறைமைகள்

மற்றும் நீதித்துறை நிருவாக சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மேன்முறையீட்டு நீதிமன்ற 9ஆம் சுற்று விசேட நீதிபதி க்லிபர்ட் வெலேஸ் அவர்கள் கலந்து கொண்டார்.

கட்டியெழுப்பப்படுகின்ற நீதிபதிபதிகள் நிறுவகம் அதன் பிரசவ வேதனையை அனுபவித்தது. அதன் விளைவுக்கு துணையாக இருப்பதற்கு மிகச்சிறந்த அறிவாற்றலுடனும் தொலைநோக்குடன் கலாநிதி A.R.B. அமரசிங்க அவர்கள் இருந்தது ஒரு அதிர்ஷ்டமாக இருந்தது. 1985 நொவம்பர் 20ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தினால் "இலங்கை நீதிபதிகள் நிறுவகம்" என்ற தலைப்பில் பாராளுமன்றச் சட்டமொன்றினால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதில் இறுதி விளைபயனுக்குக் காரணமாக இருந்த முயற்சிகளுக்காக நீதிபதிகள் நிறுவகத்தின் தோற்றத்தில் பெரிதாக அவரின் பெயர் எழுதப்பட வேண்டும். 1986 ஜனவரி 01ஆம் திகதி முதல் நீதிபதி சோசா பணிப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார். அதைனைத்தொடர்ந்து நீதிபதிகளுக்கான கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சிக் குறிப்புக்கள் மற்றும் நடப்பு ஆலோசனை சேவை போன்றவற்றை ஒழுங்கு செய்வதன் மூலம் சகல சாத்தியமான வழிகளிலும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பணியாற்றியது. 1990 இல் நீதிபதி K. விக்னராஜா பிரதிப்பணிப்பாளராக சேர்ந்து கொண்டது நீதிபதி சோசா அவர்களுக்குப் பெரும் அதிர்ஷ்டமாக இருந்தது என்பதுடன் திரு. P.நெவில்லே ஏ.டி சில்வா அவர்கள் பிரதம நீதியரசரின் செயலகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் நிறுவகத்தின் செயலாளராக இணைந்து கொண்டார்.

நீதிபதிகள் நிறுவகமானது பதவி-வழி தலைவராக பிரதம நீதியரசரினால் தலைமை தாங்குகின்றதும் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் பொதுவாக உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதிகள் இருவரும் உள்ளடங்கிய முகாமை சபையொன்றினால் இயங்குகின்றது. நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமை என்பவை முகாமைசபையினால் உரித்தாக்கப்பட்ட விடயங்களுக்குட்பட்டதாகும்.

**நிறுவகத்தின் குறிக்கோள்கள்**

1. நீதித்துறை அலுவலர்களினால் நீதித்துறை மற்றும் சட்ட விடயங்கள் மீதான கருத்துக்கள், ஆலோசனைகளைப் பரிமாறுவதற்கான வசதிகளை வழங்குவதற்கு;

2. நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கு;

3. நீதி நிருவாகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி மற்றும் ஆய்வுக் கற்கை நெறிகளை உருவாக்கி நடாத்துவதற்கும்;

4. நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்விசார் பொருட்களையும் வழங்குதற்கும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவக முகாமை சபையின் முதலாவது தலைவராக நிறுவகத்தின் மீது தீவிர ஆர்வம் கொண்டிருந்த பிரதம நீதியரசர் S. சர்வானந்தா நியமிக்கப்பட்டிருந்தார். அவரைத்தொடர்ந்து பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க நியமிக்கப்பட்டார். நீதித்துறையில் அவர் சுயமாகவே ஒரு உறுப்பினராக இருந்தார் என்பதுடன் அவர் பூரண விருப்பத்துடன் நிறுவகத்தின் அலுவல்களில் பங்கேற்றார். நிறுவகத்தின் சகல கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகளில் அவர் பங்கு பற்றினார். கருத்தரங்குகளில் சட்டத்தரணிகள் மற்றும் அளவையாளர்கள் போன்றோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் என்பதுடன் நீதிபதிகள் குழாம் மற்றும் சட்டத்தரணிகள்

போன்றோருடன் நட்புணர்வு உறவுகளைப் பேணும் நோக்கில் கண்காணிப்புக் குழுக்களை நிறுவினார். நிறுவகம் எப்போதும் அவரை நினைவில் வைத்திருக்கும்.

அதன்பின்னர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருந்த நீதிபதி தம்பையா முகாமை சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதுடன் அவர் ஏற்கனவே முகாமை சபையில் ஒரு அங்கத்தவராக இருந்து நிறுவகத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றியிருந்தார். திரு A.S.விஜேதுங்க அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அப்போதைய செயலாளராக இருந்தவர் என்பதோடு நிறுவகத்தை வெற்றிப்பாதைக்குக் கொண்டுவருவதற்கான முன்னோடி முயற்சிகளில் முக்கிய பங்காற்றியவருமாவார். அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அப்போதைய தலைவராக இருந்தார் என்பதோடு அவர் நிறுவகத்தின் மீது ஒத்துழைக்கின்ற அக்கறையைக் காண்பிப்பவராக இருந்தார். அவரைப்பின் தொடர்ந்து வந்த திரு லால் பீரிஸ் மற்றும் அவரின் உதவியாளர் திரு எஸ். விதானாரச்சி ஆகியோரும் நிறுவகத்தின் மீது ஓர் உற்சாகமான அக்கறையைப் பேணிவந்தனர். நிறுவகத்தின் நலனுக்காக சிறப்பான ஆர்வத்தை அவர்கள் கொண்டிருந்தனர் என்பதோடு நிறுவகத்துக்கு உறுதியளிக்கின்ற கோபுரமாகவும் அவர்கள் இருந்தனர்.

ஆசியா புவுன்டேஷன் அமைப்புக்கு நீதிபதிகள் நிறுவகம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. நிறுவகத்தின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் இருந்த திரு.ஜோன் கயர் மற்றும் அதன்பின்னர் திரு நிக் லென்க்டன் அவர்களினால் வழங்கிய ஆதரவுக்கு நிறுவகம் நன்றிக்கடன்பட்டுள்ளது. எமது நிறுவகம் ஆசியா பவுன்டேஷன் அமைப்பின் முதன்மை கரிசனைகளில் ஒன்றாகவும் அதன் நன்கொடையில் ஒரு பயனாளியுமாகும் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம். அதன் பின்னர் நிறுவகம் புதுக்கடைப் பிரதேசத்தில் உள்ள உயர்நீதி மன்ற வளவில் அமைக்கப்பட்டது என்பதுடன் அதன் செலவுகள் அரசாங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

நீதி தொடர்பான விடயங்கள் மீது மேன்முறையீட்டு நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதிகளின் வான்மை மற்றும் அனுபவம் என்பவற்றையும், நீதிபதிகளின் பயிற்சிக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குகின்ற நிருவாக விடயங்களில் நீதியமைச்சின் சிரேஷ்ட அலுவலர்களின் உதவியையும் நிறுவகம் பெற்றுக்கொண்டது. 1990 நொவம்பரில் நீதித்துறைக் கல்வி மற்றும் ஆய்வுக்கான கலிபோர்னியா நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி போல் எம். லீ இலங்கைக்கு விஜயம் செய்து கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களை உள்ளடக்கி நீதித்துறைக்காக அனைத்தும் உள்ளடக்கிய கல்விப்பயிற்சி முறைமையொன்றை, மூன்று வருடம் கொண்ட வழிகாட்டி அடிப்படையிலமைந்த கல்விப் பயிற்சியை வழங்குவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு வழங்க இயலுமான ஒரு கருத்திட்டத்தை உருவாக்கினார்:

(1) இலங்கை நீதித்துறையின் புதிய அங்கத்தவர்களுக்கு ஆறுமாத கால துறைசார் கல்வி நிகழ்ச்சித்திட்டம், அவர்களின் நீதித்துறை அறிவு மற்றும் திறன்களை இற்றைப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும், பின்னர் அதனைத் தொடரக்கூடிய முறையில் அமைந்தது.

(2) மாவட்ட நீதிமன்றங்களுக்கும் மேல் நீதிமன்றங்களுக்கும் புதிதாகப் பதவி உயர்வு பெற்ற நீதிபதிகளுக்காக தனியான ஒருமாதகால சேவைக்காலபயிற்சி நிகழ்ச்சி.

(3) நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் போன்றோருக்கு புதிய சட்ட அபவிருத்திகள், பொது மற்றும் தனிப்பட்ட நீதிமன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் மற்றும் உள்ளூர் நீதிமன்ற பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் தரப்படுத்தல் என்பவவை தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவி செய்வதற்கு வருடாந்த சேவைக்காலகல்வி மாநாடுகளைத் தொடர்தல்.

(4) ஒரு வாரகாலம் - நீதிமன்ற முகாமை, தொடர்பாடல் திறன்கள், பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் நீதிமன்ற அறை நியாயத்துவம், குடும்பச்சட்டம், இளம்பராயச்சட்டம், குற்றவியல் சட்டம், குடியியல் சட்டம், மரணசாதன அதிகாரப்பத்திரம் மற்றும் உளச் சுகாதாரச் சட்டம், காணி மற்றும் பாகப்பிரிவினைச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பன உட்படுகின்ற விடயங்களில் நீதித்துவ தகவல் தேடுதல் மற்றும் தீர்மானம் எடுத்தல் மற்றும் சட்டவியல் மற்றும் மனிதநேயங்கள் மற்றும் விசேட நீதிமன்ற கடமையை கையாள்வதில் சாட்டுதல்கள் போன்ற மிக முக்கிய நீதித்துவ விடயங்களின் மீது உயர் நீதித்துவக் கற்கை நெறிகள்.

(5) நீதித்துறைக்காக. செவிப்புல மற்றும் கட்புல (Audio and Video Taped) கல்வி உபகரணங்கள் உட்பட (நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்காக அடிப்படை நூலக வசதிகளுடன்) நாளாந்த வேலைக் கருவிகள் (நீதிமன்ற ஆசனப்புத்தகங்கள், சரிபார்த்தல் பட்டியல்கள், பேச்சுச் சொற்கள் மற்றும் எழுத்து வடிவங்கள், கைநூல்கள் மற்றும் ஏனைய குறிப்புப் பொருட்கள்) பரிபூரண பொருட் தொகுதியொன்றைத் தொடங்குதல்.

(6) நீதிபதி-ஆசிரியர்களுக்காக செயற் திறனான நீதித்துறை பீடமொன்றினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்.

(7) நீதிமன்றச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் நீதிமன்றத் தாமதங்களைக் குறைப்பதற்கும் மற்றும் நீதிபதிகளின் ஒழுக்கநெறி நடத்தை மற்றும் பொது வகைப்பொறுப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கும் தொடர் ஆய்வுக் கள அபிவிருத்தி நிகழ்ச்சிகள்.

(8) மேற் சொல்லப்பட்ட நீதித்துறை கல்வி முறைமையை அமுல்படுத்துவதற்கு பொருத்தமான வகுப்பறைகள், அலுவலகங்கள், செவிப்புல கட்புல உபகரணங்கள் மற்றும் ஏயை வளங்களுடன் கூடிய ஒரு பயிற்சி வசதியை வடிவமைப்பதற்கும் வாடகைக்கு எடுப்பதற்கு சாத்தியப்படுத்துவதற்கு அல்லது எதிர்கால நிரமாணிப்புக்கு வழிவகை செய்தல்.

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் தரமான நீதித்துறையை ஊக்குவிப்பதற்கும் நியாயமானதும், துரிதமானதும் மற்றும் செற்திறனானதுமான நீதித்துறை நிர்வாகத்துக்காக சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்துவதற்குமாகும் என்பதோடு அது நீதித்துறை அங்கத்தவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றுக்காக தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான ஒரு கட்டளையாகவும் உள்ளது. இந்தத் தேவைப்பாடு நீதிபதிகள் பதவியேற்கின்ற நேரத்தில் அவர்களுக்கான பொருத்தமான பயிற்சிக்கு மாத்திரமல்லாமல் அவர்களின் பதவிக்காலம் முழுவதும் தொடர்கின்ற கல்வியாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். நீதித்துறையின் தரம் என்பது எந்தளவுக்கு சிறந்தவர்களாக நீதிபதிகள் உள்ளனர் என்பதிலேயே தங்கியுள்ளது. நிர்வகிக்கப்படுகின்ற நீதித்துறையானது தனியாக அதனை நிருவகிக்கின்ற நீதிபதிகளைப் போன்று சிறந்ததாக இருக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சிக்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற உலக நாடுகள் இதனைப் புரிந்து கொண்டுள்ளன என்பதுடன் நீதிபதிகளுக்கான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் என்பவற்றை நடாத்துகின்றன.

இந்த கால கட்டத்தில், நிறுவகம் உயர் நீதிமன்றத்தின் அறை இலக்கம் 1308 இல் தன் பணிகளைச் செய்து வந்தது. நீதித்துறை அலுவலர்களுக்காக சேவைக்காலபயிற்சியை நடாத்துவதற்கு நீதிபதி J.F.A. சோசா அவர்களுடன் சேர்த்து ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிபதி K. விக்னராஜா அவர்களை பிரதிப் பணிப்பாளராக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை

சபை நியமித்தது. K. விக்னராஜா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, 1986 இல் பிரதிப் பணிப்பாளராக ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி S.J.D. டி S. விஜயரத்ன கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் 2002 இல் பிரதிப் பணிப்பாளராக ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி P.H.K. குலதிலக்க கடமைகளைப் பொறுப்பேற்றார். அவர் அவரின் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் சட்டமா அதிபதி திணைக்களத்தின் உறுப்பினராக, மேல் நீதிமன்ற நீதிபதியாக மற்றும் மேன் முறையீட்டு நீதிபதியாக நீதிபதிகள் நிறுவகத்துக்கு ஒரு சொத்தாக இருந்தார் என்பதோடு நீதித்துறை அலுவலர்களுக்கு ஒர் அறிவார்ந்த ஆலோசகராகவும் இருந்தார்.

2000 ஆம் ஆண்டில் G.P.S. டி சில்வா அவர்கள் ஒய்வு பெற்ற பின்னர், பிரதம நீதியரசராக சரத் என். சில்வா நியமிக்கப்பட்டார். நீதிபதிகள் நிறுவகத்துக்கு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பலம் வாய்ந்த ஒரு கோபுரமாகத் திகழ்ந்தார். அவர் அவரது விஜேராம என்ற இடத்தில் இருந்த வாசஸ்தலத்தை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தார் என்பதோடு நீதித்துறை அலுவலர்களுக்காக பயிற்சியை நடாத்துவதற்காக இருக்கக் கூடிய சட்ட மற்றும் நீதித்துறை மறுசீரமைப்புக்கள் கருத்திட்டத்துக்கான நிதியையும் ஒழுங்கு செய்தார்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் நீதியமைச்சின் சட்ட மற்றும் நீதித்துறை மறுசீரமைப்புக்கள் கருத்திட்டம் மற்றும் உலக வங்கியுடன் இணைந்ததாக சட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கான ஆதரவுடன் நீதித்துறை அலுவலர்களுக்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை ஆரம்பித்ததன் மூலம் நீண்டகால நீதித்துறைப் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். பிணக்குகளை வினைத்திரனாகவும் தகைமையாகவும் தீர்த்து வைப்பதற்கான ஒரு நவீன நீதித்துறை முறைமையை உருவாக்குவதற்கு இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது. நீதித்துறைக்கான நிதி மற்றும் பயிற்சி வழங்குவதோடு வணிகச் சட்டத்தின் மீது விசேட கவனத்துடன் கூடிய புதிய மற்றும் சேவைக்காலநீதிபதிகள் ஆகிய இரு பகுதியினருக்கும் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியை விருத்தி செய்தல் கருத்திட்டத்தின் முக்கிய பகுதியாக இருந்தது. இது வரையில், மேலதிக வகுப்பு, பிரயாணம், தங்குமிடம் மற்றும் நியாயமான சீவனோபாயச் செலவுகள் உட்பட ஒரு வருடத்துக்கு நீதித்துறையின் 3 அங்கத்தவர்களுக்காக LLM நிகழ்ச்சித்திட்டத்துக்கான கல்விக்காக கருத்திட்டம் நிதி வழங்கியுள்ளது.

அப்போது விஜேராம மாவத்தையில் இருந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்களது உத்தியோக பூர்வ வாசஸ்தலதில் அமைக்கப்பட்டிருந்த நிறுவகத்தில் நீதித்துறை அலுவலர்களுக்கும் நீதி மன்ற உத்தியோகத்தர்களுக்கும் கணினிப் பயிற்சியையும் பிரதம நீதியரசர் ஆரம்பித்திருந்தார். அவரின் கால கட்டத்தில் நீதியமைச்சுக்கான ஒரு புதிய கட்டட நிர்மாணத்தை மேற்கொண்டார் என்பதோடு அதில் 5 ஆம் மாடி நீதிபதிகள் நிறுவகத்துக்கும் 4 ஆம் மாடியின் ஒரு பகுதி நீதிபதிகளின் வாசஸ்தலத்தக்கும் ஒதுக்கித் தரப்பட்டது. 2000 இலிருந்து 2009 வரை பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தில் நிறுவனத்துக்கான ஆதரவுக்கும் நிறுவனத்தின் அலுவல்களுக்கு வெளிப்படையாக அவராகவே முழுமனதுடன் ஈடுபாடு காட்டியமைக்கும் அவருக்கு நிறுவனம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. நிறுவகம் அவரை எப்போதும் நினைவில் கொள்கின்றது.

நிறுவகத்தின் முதல் தாபகப் பணிப்பாளரான நீதிபதி J.F.A. சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளராக 21 வருடங்களுக்கு மேலாக நிறுவகத்துக்கும் நீதித்துறை அலுவலர்களுக்கும் ஒரு மகத்தான பணியாற்றி 2008 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். நீதிபதி J.F.A. சோசா அவர்கள் எமது ஊக்கத்துக்கு தொடர்ந்து உதவி வந்தார் என்பதோடு எப்போதும் எமது நினைவில் அவர் இருப்பார்.

நீதிபதி J.F.A. சோசா அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர், 2008ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளராக ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி நிஸ்ஸங்க உடலகம நியமிக்கப்பட்டார் என்பதோடு அவர் 2011 ஆம் ஆண்டு வரை பணிப்பாளராகக் கடமையாற்றினார். நீதிபதி நிஸ்ஸங்க உடலகம அவரின் பதவிக் காலத்தில் முதன்முறையாக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இணையத்தளத்தைத் ஆரம்பித்து வைத்தார். உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் மேல்நீதிமன்ற நிதிபதிகளின் உதவியுடன் நீதிபதிகளுக்கான குற்றவியல், குடியியல், வணிக விடயங்கள், வழக்கு முகாமை மற்றும் மாற்றுப்பிணக்குத் தீர்மானம் போன்றவை மீதான 10க்கும் மேற்பட்ட கற்கைநெறிப் விடயங்களை வெளியிடுவதில் நீதிபதி J.F.A. சோசா, நீதிபதி உடலகம மற்றும் நிதிபதி P.H.K. குலதிலக்க என்போர் உதவியாக இருந்துள்ளனர். நீதிபதி உடலகம அவர்களே நிறுவகத்துக்காக நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு உங்களுக்கு கௌரவமளிக்கின்றோம்.

2009 இல் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் நீதிபதி அசோக டி சில்வா பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அவரது கால கட்டத்தில், 2009 இல் நீதிபதி P.H.K. குலதிலக்க மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் என்பதோடு 2011 இல், ஓய்வு பெற்ற உயர் நீமன்ற நீதிபதி T.B. வீரசூரிய அவர்களுடன் சேர்த்து இணைச்செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். நீதிபதி T.B. வீரசூரிய மற்றும் நீதிபதி P.H.K. குலதிலக்க ஆகியோர் நிறுவகத்துக்கு சிறப்பாக பணியாற்றினர் என்பதோடு உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்றவகையில் அவர்களின் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் குடியியல் மற்றும் குற்றவியல் நீதிபதிகளுக்குப் பயிற்சி வழங்கினர். நிறுவகத்துக்கும் நீதித்துறைக்கும் வழங்கிய மகத்தான சேவைக்காக அவர்கள் இருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இந்த வாய்ப்பை நிறுவனம் பயன்படுத்திக்கொள்கின்றது. அவர்கள் இருவரையும் எமது உயர்வான அறிவார்ந்த ஆலோசகர்களாக நாங்கள் எப்போதும் நினைவு கூறுகின்றோம்.

பிரம நீதியரசர் அசோக சில்வா அவர்கள் நீதித்துறைக் கல்விலும் பயிற்சியிலும் அதிகம் ஆர்வம் காட்டினார். நிறுவகத்தின் உதவியுடன் அவர் பயிற்சி நெறிகள் மற்றும் பயிற்சியின் உள்ளடக்கங்கள் என்பவற்றை மறுசீரமைத்தார். மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் நீதித்துறை அலுவலர்களுக்கும் பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. பிரதம நீதியரசர் அசோக சில்வா அத்தகைய பல கருத்தரங்குகளில் அவராகவே பங்குபற்றி நிறுவகத்தின் சகல செயற்பாடுகளுக்கும் ஆதரவு வழங்கினார். அவரது காலத்தில் பல பயிற்சிக்கான பல பயிற்சி அலகுகள் வெளியிடப்பட்டன என்பதோடு அவர் நீதித்துறைப் பயிற்சிக்காக வளவாளர்களாக சேவைக்காலஇருந்த மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகளின் சேவைகளைப் பெற்றுக் கொண்டார். பிரதம நீதியரசர் அசோக சில்வா அவர்கள் பயிலுனர் நீதிபதிகளைப் பயிற்சியளிப்பதற்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளை அழைப்பதற்கு அறிவுரை வழங்கினார்.

அத்தோடு இந்தக்கால கட்டத்தில் நீதிபதிகள் நிறுவகமானது நீதியமைச்சின் புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது என்பதுடன் அப்போதிருந்த நீதியமைச்சின் செயலாளர் திரு சுகத கம்லத் அவர்கள் ஒரு புதிய கேட்போர்கூடம், ஒரு கணனிக்கூடம், ஒரு நூலகம் மற்றும் நீதிபதிகள் வாசஸ்தலங்கள் என்பவற்றுடன் கூடிய ஒரு நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு புதிய நீதிபதிகள் நிறுவகத்தை நீதித்துறை அலுவலர்களுக்கு வழங்குவதற்கு எடுத்த உங்கள் முயற்சிகளுக்கு உங்களை நிறுவகம் என்றும் நினைவில் கொள்ளும். கணனிக்கூடம், கேட்போர்கூடம் மற்றும் நூலகம் என்பவற்றுக்கான அவசியமான சகல உபகரணங்களை நன்கொடையாகவும் நீதிபதிகள் வாசஸ்தலங்களுக்கான தளபாடங்களை வழங்கியமைக்காகவும் UNDP அமைப்புக்கு நிறுவகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் அசோக சில்வா அவர்களின் ஓய்வுக்குப்பின்னர், 2011 இல் பிரதம நீதியரசராக ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டார் என்பதோடு நிறுகத்தின் முகாமை

சபையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். 2012 மே மாதம் வரை நீதிபதி T.B. வீரசூரிய மற்றும் நீதிபதி P.H.K. குலதிலக்க ஆகியோர் இணைப்பணிப்பாளர்களாகப் பணியாற்றினர். அதன் பின்னர் 2012 ஜுன் மாதத்தில் நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக கடமையில் இருந்த மேல் நீதிமன்ற நீதிபதி திரு ருவான் பர்னாந்து அவர்களை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பார் சபை நியமித்தது என்பதோடு நிறுவகத்தின் கல்விசார் இணைப்பாளராக கடமையில் இருந்த நீதிவான் திரு விஜேவீர அவர்கள் நியமிக்கப்பட்டார்.

முகாமை சபைக்குத் தலைமை வகித்த பிரதம நீதியரசர் ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அவர்கள் நிறுவகத்தின் அலுவல்களுக்கு ஆதரவளித்தார் என்பதோடு நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு முக்கியமான பங்களிப்பொன்றை வழங்கினார். இந்தக் கால கட்டத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கணக்காளர் நிறுவகத்துக்கு பதில் கடமைபுரியும் கணக்காளராக நியமிக்கப்பட்டார். நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகளை திறமையாக மேற்கொள்வதற்காக நிறுவகத்துக்கு நீதிமன்றப் பதிவாளர் ஒருவரும் 3 முகாமை உதவியாளர்களும் நியமிக்கப்பட்டனர். நீதியமைச்சிலிருந்து 2 சிற்றூழியர்களை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இணைத்ததற்காக அமைச்சின் அப்போதிருந்த செயலாளர் திரு சுகத கம்லத் அவர்களுக்கு நிறுவகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

2012 இல், கூட்டுருத் திட்டமொன்றையும் செயல் திட்டமொன்றையும் நிறுவகம் தயாரித்துள்ளதுடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியியல் ஒழுங்குவிதிகளின் கீழ் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பில் அதிகாரக் கையளிப்புக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. நிறுவகம் பாராளுமன்றத்துக்கு ஆண்டறிக்கையை சமர்ப்பித்துள்ளது, நிறுவகத்தின் பதவியணி தொடர்பான விபரததைத் தயாரித்துள்ளது என்பதுடன் தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்கியுள்ளது. இந்தக் கால கட்டத்தில், பயிற்சிநெறிகளை மீள வடிவமைப்பதற்கும் நிறுவகம் நன்கு உபகரணங்களுடன் கூடிய நவீன பயிற்சி மற்றும் ஆய்வு வசதி இருப்பதனை உறுதிசெய்வதற்கு நிறுவகத்தில் உள்ள வசதிகளை நவீன மயப்படுத்தும் பணிகளையும் ஆரம்பித்துள்ளது.

நிறுவகத்தின் செயலகத்தை அமைப்பதற்கு ஒரு பொருத்தமான இடத்தை தேடுதல், பயிற்சி நெறிகளை விரிவாக்கல், Wi-Fi வசதியுடன் கூடிய ஒரு முழுமையான உபகரணங்கள் கொண்ட கணனி கூடமாக மாற்றுவதன் மூலம் நூலக வசதியை மேம்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரின் (ICTA) உதவியுடன் இணையத்தளத்தை மீளச் செயற்படுத்தல், உயர் நீதிமன்றத்தின் அறிக்கையிடப்படாத தீர்ப்புக்களை சேகரித்தல், நிறுவகத்துக்குள்ளேயே நீதிபதிகளுக்கு வதிவிட வசதிகளை வழங்கள், UNDP அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க நீதித்துறை அலுவலர்களுக்காக பயிற்சிக் கைநூல் ஒன்றை விருத்தி செய்தல் தொடர்பான வேலையை ஆரம்பித்தல், அவசியமான ஊழியர்களை நியமித்தல், பராமரிப்புக் கணினி (computer server) போன்ற தேவையான பௌதீக வளங்களை வழங்கள் மற்றும் கணினி அச்சுப்பிரதியெடுத்தல் மற்றும் பிரதியெடுத்தல் வசதி மற்றும் பொது நிர்வாக மற்றும் நிதியியல் சுற்றறிக்கைகளுடன் இணங்கியொழுகுவதன் மூலம் நிருவாக விடயங்களை செயற்படுத்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இது தொடர்பில் நிறுவகம் அதன் முகாமை சபை உறுப்பினர்களுக்கு மனமார்ந்த கௌரவத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது என்பதுடன் அது தொடர்பில் நிறுவகத்தின் ஊழியர்களுக்கு விசேடமாக கல்விசார் இணைப்பாளர் திரு மஹி விஜேவீர மற்றும் நிறுவகத்தின் பணிப்பாளர் திரு ஞானபால அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெறிவித்துக் கொள்கின்றது.

2013 ஜனவரியில், இலங்கையின் பிரதம நீதியரசராக கௌரவ மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டார் என்பதோடு அவர் நிறுவகத்தின் முகாமை சபையின் தலைவராக நிமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர்

மொஹான் பீரிஸ் ஆரம்பத்திலிருந்தே நிறுவகத்தின் அலுவல்களுக்கு முழுமனதுடன் அவராகவே மும்முரமாக ஈடுபட்டார் என்பதோடு அவர் நிறுவகத்தின் பலம் வாய்ந்த கோபுரமாக இருக்கின்றார். 2013 ஏப்ரல் மாதத்தில், நிறுவகத்தின் அலுவலகத்துக்கு நீதியமைச்சின் புதிய கட்டடத்தில் ஒரு இடம் கிடைத்தது என்பதோடு அதற்கான முன்முயற்சியை மேற்கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களுக்கு நன்றிகளை நிறுவகம் தெரிவித்துக்கொள்கின்றது. நிறுவகத்தின் அலுவகத்தைப் பயன்படுத்துவதற்கு நீதியமைச்சின் கட்டடத்தை ஒதுக்கித்தந்தமைக்காக நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா அவர்களுக்கும் நிறுவகம் நன்றிக்கடன் பட்டுள்ளது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் மேல் நீதிமன்ற நீதிபதிகள், காதி நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றப் பதிவாளர்கள் ஆகியோர்களுக்கு நிறுகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்கினார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் நிறுவகத்தின் 9 ஆக இருந்த ஊழியர்களை 23 ஆக அதிகரித்தார் என்பதோடு கல்வி நிறுவனங்கள், துறைசார் தகைமையுடைய சட்ட வல்லுனர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள வல்லுனர்களுக்கும் நீதிபதிகளுடன் அவர்களது அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு அழைப்பு விடுத்தார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் வழமையாக நிறுவகத்தில் நீதிபதிகளை சந்திப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகளுக்கும் வல்லுனர்களுக்கும் அழைப்பு விடுத்தார் என்பதோடு அதன் மூலம் சட்ட மற்றும் நீதித்துறைப் பிரச்சினைகள் தொடர்பாக நீதிபதிகள் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றுது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நிறுவகத்திலும் வேறு இடங்களிலும் பல கருத்தரங்குகள், விரிவுரைகள், முன்வைப்புக்கள் அவராகவே பங்குபற்றி நீதிபதிகளுடன் அவரது அறிவு மற்றும் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அவரது காலத்தில், சட்டச் சான்று மற்றும் குடியியல் சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக நீதிமன்ற ஆசனப் புத்தகத்தை இற்றைப்படுத்துவதற்கு இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவர் தற்போது பரந்த அறிவுள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் உதவியோடு வழக்கு முகாமை விடயத்தில் குடியியல் நீதி முறைமைக்கு சட்ட மறுசீரமைப்புக்களை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளார். குடியியல் நீதி முறைமைக்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் நிறுவகம் மகிழ்வடைகின்றது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் பதவியேற்ற பின்னர், பிரதானமாக வழக்கு முகாமை, நீதிமன்ற நிருவாகம் மற்றும் நீதித்துறை ஒழுக்க நெறிகள் தொடர்பாக மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் 200 க்கும் மேற்பட்ட நீதிபதிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த கால கட்டத்தில் திரு லக்மால் விக்ரமசூரிய அவர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. நிறுவகத்தின் இணைப்பாளராக நீதிபதிகளுக்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை தேடுவதில் அவர் அர்ப்பணிப்புச் செய்துள்ளார் என்பதோடு நிறுவகத்தின் சகல வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களையும் அவர் ஒழுங்கு செய்தார். நிறுவகத்தின் சார்பாக சகல வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்வதிலும் இணைப்புச் செய்வதிலும் மேற் கொண்ட சிறமத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் அவருக்கு நன்றி செலுத்துவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நிறுவகம் விரும்புகின்றது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களின் கால கட்டத்தில் நீதிபதிகள் நிறுவகம் வேகமாக முன்னேறுகின்றது என நாங்கள் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

நிறுவகத்துக்கு வளவாளர்களாகவும் நிறுவகத்தின் ஏனைய செயற்பாடுகளுக்கும் ஆதரவளித்தமைக்காக உயர் நீதிமன்ற மற்றும் மேல் நீதிமன்ற சகல நீதிபதிகளுக்கும் கல்விசார் சமூகத்துக்கும் தொழில் வல்லுனர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில் ஒரு முக்கிய வகிபாகம் வகிக்கும் நீதிசேவை ஆணைக்குழுவின் செயலாளரான திரு சிசிர ரத்நாயக்க அவர்களையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இன்று, நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் (IOJT) அங்கத்துவத்தை நிறுவகம் பெற்றுக் கொண்டுள்ளது. நீதித்துறை அலுவலர்களுக்கு சட்ட மற்றும் நீதித்துறை தகவல்களை வழங்குவதற்காக இ-நூலக வசதியுடன் அதன் சொந்த இணையத்தளத்தை நிறுவகம் கொண்டுள்ளது. நிறுவகத்தை யாழ்ப்பான, தங்காலை மேல் நீதிமன்றங்கள் மற்றும் பிரதம நீதியரசரின் அறை என்பற்றுடன் இணைக்கின்ற ஒரு காணொலி மாநாட்டு வசதி (video conferencing facility) நிறுவகத்துக்குள்ளது. இந்திய உச்ச நீதி மன்றம் மற்றும் மேல்நீதிமன்றம், ஐக்கிய அமெரிக்கா உயர் நீதிமன்றம் ஆகியவற்றிலிருந்து பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தீர்ப்புக்கள் மற்றும் பிரபுக்கள் சபையின் தீர்ப்புகள் என்பவற்றை அனுகக் கூடிய முதலாவது சர்வதேச தரவு மையமான “மெனுபட்ரா” (Manupatra) என்ற இந்திய இணையத்தளம் நிறுவகத்துக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை நீதித்துறை அலுவலர்களைப் பயிற்றுவித்து இலத்திரனியல் பயிற்சி உபகரணங்கள் உட்பட பயிற்சி பாட அலகுகளை வழங்குவதில் ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதித்துறை நிலையம் (Federal Judicial Centre) , மலேசிய, சிங்கப்பூர் மற்றும் இந்திய நீதிபதிகள் நிறுவகம், என்பவற்றினால் வழங்கப்பட்ட ஆதரவை நிறுவகம் பதிவு செய்து வைக்க விரும்புகின்றது.


நிறுவகத்தின் முகாமை சபை நீதியமைச்சின் செயலாளர் மற்றும் அவரின் அலுவலர்கள், UNDP, ஆசியா பவுன்டேஷன், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நிதி வழங்கும் முகவர்களுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிப்புச் செய்கின்ற நிறுவகத்தின் ஊழியர்களுக்கும் நிறுவகம் நன்றியைத் தெறிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

( 1985 – 1991 வரை ‘Coutersy Judges’ நாளேடு பிரிவு 1)

## 6. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை மற்றும் ஊழியர்கள்

நிறுவகமானது தொடர்ந்து பின்தொடர்கின்ற ஒரு பொது முத்திரையுடன் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஓர் அமைப்பாகும் என்பதோடு அதன் நிருவாகமும் முகாமையும் முகாமைசபையால் நிருவகிக்கப்படுகின்றது. முகாமை சபையானது பிரதம நீதியரசர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை உள்ளடக்கி முகாமை சபையின் தலைவராக பிரதம நீதியரசர் இருப்பார். நிறுவகத்தின் திட்டத்தை மீளமைக்கப்பட்ட பின்னர், நிறுவகத்தின் அமைப்பு வரைபடம் பின்வருமாறு காணப்படும்:

**2013 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் நிறுவன அமைப்பு வரைபடம் பின்வருமாறு**




பதவி வழியால் கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் உள்ளடங்கிய முகாமை சபையினால் நிறுவகத்தின் நிருவாகமும் முகாமையும் பரிபாலிக்கப்பட வேண்டும் என இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தின் பிரிவு 3 இடமளிக்கின்றது.

# 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபை

## முகாமை சபை

2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

இலங்கைத் திரு நாட்டின் பிரதம நீதியரசர், ஜனாதிபதி சட்டத்தரணி, கௌரவ மொஹான் பீரிஸ்- தலைவர்

| | |
|---|---|
| கௌரவ காமினி அமரதுங்க, | உறுப்பினர் (2013 ஏப்ரல் வரை) |
| கௌரவ நீதிபதி சலீம் மர்சூப்f | உறுப்பினர் |
| கௌரவ ஷிராணி திலகவர்தன | உறுப்பினர் (2013 ஆகஸ்ட் முதல்) |

## நிறுவகத்தின் ஊழியர்கள்

முகாமை சபை நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் அத்தகைய அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்கள் என்பவர்களை நியமிக்கின்றது என்பதுடன் பணிப்பாளர் அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போன்றோர் மீது (பதவி நீக்கும் அதிகாரம் உட்பட) ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகிக்கின்றார். அத்தோடு பணிப்பாளர் அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போன்றோர்களின் கொடுப்பனவுகளை தீர்மானிக்கும் அதிகாரம் முகாமை சபைக்குள்ளது.

**நிறுவகத்தின் ஊழியர்கள்**

| | |
|---|---|
| 1. பணிப்பாளர்- | திரு ருவான் பர்னாந்து, மேல் நீதிமன்ற நீதிபதி |
| 2. ஆலோசகர்- | கௌரவ ரஞ்சித் ரணராஜா, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி |
| 3. கல்விசார் இணைப்பாளர்- | திரு லக்மால் விக்ரமசூரிய, மாவட்ட நீதிபதி |
| 4. கணக்காளர்- | திரு பு. மெத்தேகொட |
| 5. முகாமை உதவியாளர்கள்- | திருமதி டிலினி கன்னொருவ<br>திரு கபில ஜயசிரி<br>செல்வி S.C.P.லக்மாலி<br>செல்வி K.A.C.P.P. குணவர்த்தண |
| 6. சிற்றூழியர்கள் | திரு D. லக்ஷான் வெலிகல<br>திரு R.I.A.P.மலிந்த |
| 7. சாரதி | திரு G.W.ரஞ்சித் |

## இலங்கை நீதிபதிகள் நிறுவக அலுவலர்களின் புகைப்படம்



## 7. நிறுவகத்தின் நிதிகள்

**நிறுவகத்தின் நிதிகள்**

நிறுவகத்தின் முகாமை சபையினால் நிருவகிக்கப்படுகின்ற சொந்த நிதி நிறுவகத்துக்கு உள்ளது. நிறுவகத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் இரண்டுக்கும் நீதியமைச்சினூடாக திறைசேரி மானிய வழியில் இருந்து பிரதானமாக நிறுவகத்துக்கு நிதியீட்டப்படுகின்றது. இந்த செலவினத்துக்கான வரையறையை நீதியமைச்சுÆதிறைசேரி எல்லையை வரையறுக்கின்றது என்பதுடன் இத்தகைய வயைறைக்குள்ளேயே நிறுவகம் செயற்பட வேண்டியுள்ளது.

1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்படுகின்ற ஏதேனும் மூலத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நன்கொடைகள், பரிசுகள் மற்றும் மானியங்களை ஏற்றுக் கொள்வதற்கான அதிகாரம் நிறுவகத்துக்கு உள்ளது என்பதுடன் ஏதேனும் மூலத்திருந்து அவ்வாறு கிடைக்கின்ற அத்தகைய சகல நன்கொடைகள், பரிசுகள் மற்றும் மானியங்களை நிறுவகத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டும். நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவுகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

நடப்பு வருடத்துக்கு இதுவரையில் மூலதனச் செலவுக்காக ரூபாய் 6 மில்லியனும் மீண்டெழும் செலவினத்துக்காக ரூபாய் 18 மில்லியனும் நீதியமைச்சினூடாக திறைசேரி வழங்கியுள்ளது.

நிறுவகத்தின் பயிற்சி மற்றும் ஆய்வுச் செயற்பாட்டுக்கு விசேடமாக, தொழிநுட்ப அடிப்படையிலமைந்த பயிற்சி முறைகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இணையத்தளம், நூலகம் காணொலி மாநாட்டு வசதி, தங்குமிட வசதி, வெளியீடுகள் மற்றும் நிறுவகத்துக்காகன வாகனங்கள் கொள்வனவு உட்பட பராமரிப்பு சேவைகளுக்காக, 2015 இல் மூலதனச் செலவினத்துக்காக மேலதிகமாக 6 மில்லியனையும் மீண்டெழும் செலவினங்களுக்காக 25 மில்லியனையும் நிறுவகம் எதிர்பார்க்கின்றது.

## 8. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

1985 இல் நிறுவகம் தாபிக்கப்பட்டதிலிருந்து நிறுவகத்திலேயே அதிக அளவிளான பயிற்சி நெறிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எவ்வாறாயினும், 2012 இல் நிறுவகத்தின் விரிவாக்கத்தோடு, மேல் நீதிமன்ற நீதிபதிகள், ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள், காதி நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றம் நீதிமன்றப் பதிவாளர்கள் போன்றவர்களுக்கும் சேவை வழங்குவதற்கு நிறுவகத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு, நீதித்துறைக் கல்வி, ஆளுமையை மேம்படுத்தல் (திறன்கள் விருத்தி உட்பட), உளப்பாங்கு மாற்றம் மற்றும் சமுக அர்ப்பணம் என்பவற்றின் மீது கவனம் செலுத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதனூடாக நீதித்துறை செயலாற்றுகையின் ஒரு உயர் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நீதிபதிகள் நிறுவகம் அர்ப்பணித்துள்ளது. கல்வி மற்றும் ஆய்வினூடாக மேம்படுத்தப்பட்ட நீதித்துறை நிருவாகம் மற்றும் முகாமை என்பவற்றை மேலும் விருத்தி செய்வதற்கும் கைக்கொள்வதற்கும் நிறுவகம் மேலும் அர்ப்பணிப்புச் செய்துள்ளது. நீதி சேவை ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு சேவை வழங்குவதற்கு நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் கரிசனை கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்சி அலகுகள் மற்றும் பயிற்சியில் பங்குபற்றுகின்ற ஆட்களைப் பொறுத்து, பயிற்சித்தேவைகள் வேறுபடுகின்றன என்பதோடு சகல பங்குபற்றுபவர்களுக்கும் உரிய பொதுப்பயிற்சி நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. பயிற்சியின் வகை மற்றும் நீதித்துறை அலுவலரின் அனுபவம் அல்லது முன்னைய பயிற்சி அமர்வுகளில் பெற்றுக் கொண்ட அறிவு என்பவற்றைப் பொறுத்து கட்டாயமான, தன்னார்வ அல்லது தன்விருப்பத்துக்குரியதாக ஒரு பயிற்சி நெறி இருக்கலாம். பயிற்சியைக் கட்டுப்படுத்த யாருக்கு அதிகாரம் இருக்கின்றது மற்றும் பயிற்சி நெறிக்கு எவ்வாறு நீதியீட்டம் செய்யப்படுகின்றது, இலக்குக் குழுக்கள் மற்றும் பயிற்சியின் நேரம் என்பவற்றையும் இது காப்பீடு செய்கின்றது.

இலங்கையில், நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வான்மையை மேம்படுத்துகின்ற முறையொன்றாகவும் சகல நீதிபதிகளும் அவர்களது நீதித்துறை சேவைக்காலத்தில் அவர்களது அறிவை மேம்படுத்துகின்ற வழியாகவும் சேவைக்காலபயிற்சியில் பங்கு கொள்வது சகல நீதித்துறை அலுவலர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இலங்கை நிதிபதிகள் நிறுவகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நிதிபதிகள் சேவைக்காலபயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் வேண்டப்பட்டுள்ளனர் என்பதோடு அவ்வாறு பங்குபற்ற முடியாமல் போனால் அத்தகைய பயிற்சிகளில் பங்குபற்ற முடியாமை தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

புதிதாக நியமிக்கப்பட்ட பயிலுனர் நீதித்துறை அலுவலர்கள் விடயத்தில், அறிமுக மற்றும் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நடைபெறும் என்பதோடு அத்தகைய நிகழ்ச்சிகள் அவர்களுக்கு கட்டாயமானதாகும். இலங்கை நிதிபதிகள் நிறுகத்தினால் நடாத்தப்படுகின்ற அத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமல் இருப்பதற்கு எவ்வித சலுகையும்

காட்டப்படமாட்டாது. ஏனைய வகை பயிற்சித் தேவையானது, நீதி சேவை ஆணைக்குழுவினால் மேலதிகப் பயிற்சிக்காக நிதிபதிகள் நிறுவகத்துக்கு சேவைக்காலஉள்ள ஒரு நீதித்துறை அலுவலரை சேர்த்துக் கொள்ளுமாறு மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்தைப் பொறுத்ததாகும்.

## பயிற்சியின் தன்மை

### 1. கட்டாயப் பயிற்சி

சேவைக்காலஉள்ள மற்றும் பயிலுனர் நீதித்துறை அலுவலர்களுக்காக தற்போதிருக்கின்ற தொடர் கட்டாய நீதித்துறைப் பயிற்சி தொடரும் என்பதோடு விருப்பத்துக்குரிய மற்றும் தன்னார்வப் பயிற்சி நிகழ்ச்சிகள் மேலே குறிப்பிடப்பட்டவாறு மேம்படுத்தப்படும். எவ்வாறாயினும், நீதித்துறை அலுவலர்களின் தேவைகள் மற்றும் ஏனைய நியாயாதிக்கங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு நீதித்தறைப் பயிற்சிக்கான புதிய அனுகுமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் அதாவது தொழிநுட்ப அடிப்படையிலமைந்த நேருக்கு நேர் தொலைதூரப் பயிற்சி மற்றும் தொழிநுட்ப அடிப்படையிலமைந்த சுயமாகக் கற்றல் நீதித்துறைப்பயிற்சி போன்றவற்றைத் தற்போது கருத்தில் கொள்கின்றன.

### 2. விருப்பத்துக்குரிய பயிற்சி

நீதித்துறை அலுவலர்களின் தரம் மற்றும் தேவைகள் போன்றவற்றில் விருப்பத்தெரிவுக் கற்கைநெறிகளாகக் கருதப்படுகின்ற நீதித்துறை வேலைக்கான ஆங்கிலத்தில் எழுதுதல், ஆளுமை விருத்தி, கணனிப் பயிற்சி, சுகாதார விருத்தி போன்ற ஏனைய நியாயாதிக்கங்களில் ஆதரவுக் கற்கை நெறிகளுக்கான தேவை. கண்காணிப்பு நிகழ்ச்சி போன்ற ஆதரவளிக்கின்ற கற்கை நெறிகள் சேவைக்காலஉள்ள நீதித்துறை அலுவலர்களுக்கான விருப்பத்தெரிவு நிகழ்ச்சிகளாகும்.

### 3. பயிற்சிக் காலம்

ஏனைய நாடுகளைப் பொறுத்தவரை சுய அபிவிருத்தி அல்லது நன்கு பயிற்றப்பட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து ஒரு குறிப்பிட்டளவு நீதிபதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதற்கு மாற்றமாக இலங்கையில், தனியார் சட்டத்தரணிகள் சங்கம் அல்லது உத்தியோகபூர்வ சட்டத்தரணிகள் சங்கம் ஆகிய இரண்டில் ஒன்றில் சட்டத்தரணியாக செயற்படுகின்ற ஆரம்ப கட்டாய காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணிகளிலிருந்து நீதித்துறை அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். குடியியல் சட்ட நியாயாதிக்கத்துடன் ஒப்பிடுகையில் வழமையாக 6 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நீதித்துறைப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதனையே இலங்கையின் அனுபவம் காட்டுகின்றது என்பதோடு இங்கு ஒரு மதிப்பீட்டு முறையைப்பின்பற்றி ஒரு மேலும் விரிவாக்கப்பட்ட காலத்துக்கு ஆரம்ப பயிற்சி வழங்கப்படுகின்றது.

### 4. பயிற்சி அதிகாரசபைகள்

தற்போது நீதித்துறைப் பயிற்சியானது இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், நீதித்துறை அலுவலர்களுக்கு தொடர்புடையதாக மற்றும் பயனுடையதாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அரச முகவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றினால் சில விசேட பயிற்சிகளை நடாத்துவதற்கு நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபை அனுமதி வழங்குகின்றது. வெளிநாட்டுப் பயிற்சி விடயத்தில், அத்தகைய அமர்வுகள் ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம், நீதித்துறைக் கல்வி நிறுவனம் அல்லது விசேட பயிற்சி நிறுவனம் ஆகிய எவையேனும் ஒரு நிறுவனத்தால் நடாத்தப்படும்.

5. **நீதித்துறை பயிற்றுவிப்பாளர்கள்**

தற்போது, உயர் நீதிமன்ற நீதிபதிகளினாலும் மேன்முறையீட்டு நிதிமன்ற நீதிபதிகளினாலும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இருப்பினும், சில வகைப் பயிற்சி நிகழ்ச்சிகள் சட்டமா அதிபதி திணைக்களத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களினாலும் நடாத்தப்படுகின்றன. பரந்த அறிவுடைய சட்ட நிபுணர்கள் மற்றும் கல்வியலாளர்கள் போன்றோரும் நீதித்துறை அலுவலர்களுக்கு தொடர்புடைய அவர்களின் அறிவு, அனுபவம் மற்றும் அவர்களின் தேர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு நீதித்துறைப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு அழைக்கப்படுகின்றனர். பயிலுனர் நீதித்துறை அலுவலர்களைக் கருத்தில் கொண்டு அவர்களின் கற்கை நெறிகள் சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆகிய இரு தரப்பினர்களையும் சட்டமா அதிபதி திணைக்களத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களையும் கொண்டு நடாத்தப்படுகின்றன. அடையாள அணிவகுப்புக்கள், மரணவிசாரணைகள் மற்றும் அறிக்கைகளைப் பதிவு செய்தல் போன்ற நடைமுறைப் பயிற்சிகளுக்காகவும் நீதிமன்ற கலந்துரையாடல் அமர்வுகளை நடாத்துவதற்கும் சிரேஷ்ட நீதிவான்கள் அழைக்கப்பட இருக்கின்றனர். மேலும், கணினிப் பாடநெறிகள், இலத்திரனியல் நீதிமன்ற கோவையிடல், உள ரீதியான விருத்தி, சட்ட மருத்துவ விஞ்ஞான கற்கை நெறிகள் போன்ற நீதிபதிகளுக்கு ஆதரவளிக்கின்ற கற்கை நெறிகளுக்காக நிறுவகத்துக்கு வெளியில் இருந்து பயிற்றுவிப்பாளர்கள் அதாவது குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த துறைசார் வல்லுனர்கள் மூலம் நடாத்தப்படும்.


## பயிற்சி மூவளங்கள் மற்றும் வசதிகள்

இந்தக் கைநூலில் அடையாளம் காணப்பட்டவாறு பின்வருவனவற்றை உள்ளடக்கி நீதித்துறைப் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு தற்போது பயிற்சிக்குரிய நவீன வசதிகளை நிறுவகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

1. நவீன வசதிகள் பொருந்திய கேட்போர் கூடம்:
2. திங்கள் முதல் சனி வரை திறந்திருக்கக் கூடிய Wi-Fi வசதிகளுடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட நூலகம்:
3. இணையத்தளம்:
4. காணொலி கலந்துரையாடல் வசதி
5. பிரதியெடுத்தல் மற்றும் கணனி அச்சுப்பிரதியெடுத்தல் வசதி:
6. சட்டப்புத்தகங்களை குறிப்பெடுத்தல்:
7. கற்கை நெறிக்குத் தேவையான பொருட்கள்:
8. குறிப்பெடுக்கின்ற பொருட்கள்:
9. சட்ட அறிக்கைகள்:
10. அறிக்கையிடப்படாத தீர்ப்புக்கள்:
11. தங்குமிட வசதிகள்:
12. சட்டத் தகவல்கள் தரவுத் தளங்கள்



நூலகம்



கேட்போர்கூடம்




நீதித்துறை அலுவலர்களுக்கான பயிற்சி அமர்வு - ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிபதி ரஞ்சித் ரணராஜா அவர்கள்.



மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான கருத்தரங்கு

## பயிற்சி நெறிகளின் வகைகள்

1) நீதித்துறை அலுவலர்களுக்கான சேவைக்கால கற்கைநெறிகள் - மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள்.
2) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கு சேவைக்கால கற்கைநெறிகள்:
3) மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான சேவைக்கால கற்கைநெறிகள்:
4) பயிலுனர் நீதித்துறை அலுவலர்களுக்கான ஒருங்கமைத்தல் கற்கைநெறிகள்:
5) புதிதாக நியமிக்கப்பட்ட தொழில் நியாய மன்றங்களின் பயிலுனர் தலைவர்களுக்கு ஒருங்கமைத்தல்Æஆரம்ப கற்கைநெறிகள்.
6) குவாசி தலைவர்களுக்கான சேவைக்கால கற்கைநெறிகள்.
7) சேவையில் உள்ள மற்றும் பயிலுனர் நீதித்துறை அலுவலர்களுக்கான கணனிக் கற்கை நெறிகள்.
8) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கான கணனிக் கற்கை நெறிகள்.
9) நீதித்துறை அலுவலர்கள், தொழில் நியாய மன்றங்களின் தலைவர்கள் மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதிகள் போன்றோருக்கான ஆய்வு முறை மற்றும் இணையத்தள ஆய்வுக் கற்கை நெறிகள்.
10) நீதித்துறை அலுவலர்களுக்கான ஆங்கிலம் எழுதும் பயிற்சி மற்றும் நீதித்துறைப் பணி கற்கை நெறிகளுக்கான இலத்தீன் மொழி.
11) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கான ஆங்கிலம் எழுதும் திறன்கள் விருத்தி மற்றும் இலத்தீன் மொழி கற்கை நெறிகள்.
12) நீதித்துறை அலுவலர்களுக்கான நீதிமன்ற நடத்தை, உளப்பாங்கு மாற்றங்கள் மற்றும் நீதிமன்றப் அலுவல்கள் விருத்திக் கற்கைநெறிகள்.
13) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கான நீதிமன்ற நடத்தை, உளப்பாங்கு மாற்றங்கள் மற்றும் நீதிமன்ற அலுவல்கள் விருத்திக் கற்கைநெறிகள்.
14) நீதித்துறை அலுவலர்களுக்கான ஆளுமை விருத்தி மற்றும் சுகாதார விருத்தி கற்கைநெறிகள்.
15) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கான ஆளுமை விருத்தி மற்றும் சுகாதார விருத்தி கற்கைநெறிகள்.
16) நீதித்துறை அலுவலர்களுக்கும் தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்குமான தீர்ப்பு எழுதுதல் கற்கை நெறிகள்.
17) மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான ஆளுமை விருத்தி மற்றும் சுகாதார விருத்தி கற்கை நெறிகள்.
18) சட்ட மருத்துவ விஞ்ஞானம் மற்றும் நச்சு இயல் கற்கை நெறிகள்.
19) நீதித்துறை அலுவலர்களுக்கும் தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்குமான மாற்றுப் பிணக்குத் தீர்வு பயிற்சி நெறிகள்.
20) மாகாண, மாவட்ட நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கான மாகாணக் கற்கை நெறிகள்.
21) சகல நீதித்துறை அலுவலர்கள், மாவட்ட நீதிபதிகள் நீதிவான்கள் மற்றும் பயிலுனர் நீதித்துறை அலுவலர்கள் போன்றோருக்கான கருத்தரங்குகள்.
22) தொழில் நியாய மன்றங்களின் தலைவர்களுக்கான கருத்தரங்குகள்.
23) மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான கருத்தரங்குகள்.

## பயிற்சி நெறிகளில் உள்ளடங்கியுள்ள இலக்கு மற்றும் குறிக்கோள்கள்

1) நீதி நிருவாகத்தில் நீதித்துறைப் பதவியின் கௌரவம் மற்றும் நீதிபதிகளின் வகிபாகம் என்பவற்றை விளங்கிக்கொள்ளல்.
2) பொதுமக்களின் நீதித்துறை மற்றும் மேலதிக நீதித்துறைச் செயற்பாடுகளில் அவர்களின் பாதகமான நம்பிக்கையைக் குறைப்பதற்கு நீதித்துறை நிருவாகத்தில் நீதித்துறை அலுவலர்களுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்.
3) வழக்காளிகளையும் பொதுமக்களையும் சந்தேகிக்காமல் தனிப்பட்ட அலுவல்களை முகாமை செய்வதற்காக அடிப்படை ஆசாரக் கோவைகளை விளங்கிக் கொள்ளல்.
4) நீதிமன்றங்களின் அலுவலர்கள், வழக்காளிகள் மற்றும் பொது மக்கள் போன்றவர்களைக் கையாளுதல் உட்பட நீதிமன்ற நடத்தை மற்றும் நீதிமன்ற அலுவல் தொடர்பான சட்டவிதிகளை விளங்கிக் கொள்ளல்.
5) நீதித்துறை அலுவலர்களுக்கான ஒழுக்கக் கோவையை விருத்தி செய்தல் (எழுதப்பட்ட ஒழுக்கக் கோவை அல்லது எழுதப்படாத சுயமாக விதிக்கப்பட்ட ஒழுக்கக் கோவை).

## சேவைக்கால கற்கை நெறிகளுக்கான பயிற்சி உள்ளடக்கம்

1. நீதித்துறை நடத்தை, ஒழுக்கவியல் மற்றும் நடத்தை.
2. மூலாதார சட்ட அறிவு (பித்தியேகமான மற்றும் செயல்முறையான சட்டம் - குற்றவியல், குடியியல், அரசியலமைப்பு, வணிகச்சட்டம், குற்றவியல் மற்றும் குடியியல் நடைமுறை, சான்றுகள் சட்டம்).
3. விசேட சட்டங்கள் மற்றும் நிறுவங்களுக்கான இயற்றப்பட்ட சட்டங்கள்
4. தனிப்பட்ட சட்டங்கள்
5. மனித உரிமைகள்
6. ஊழலுக்கெதிரான சட்டங்கள்
7. கணனி தொடர்பான திறன்கள் மற்றும் தகவல் தொழிநுட்பம்
8. புலமைச் சொத்து
9. நீதிமன்ற நிருவாகம் மற்றும் நீதிமன்ற முகாமை
10. வழக்கு முகாமை மற்றும் வழக்குப் பாய்ச்சல் முகாமை
11. கணக்கியல் மற்றும் நிதி
12. ஒழுக்காற்று நடைமுறை
13. இளம்பராய நீதி
14. நீதிக்கும் சட்ட உதவிக்கும் அனுகுவழி
15. சட்ட மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சட்ட மருத்துவம்
16. தீர்ப்பு எழுதுதல்
17. தண்டனை வழங்குகின்ற கொள்கை மற்றும் பிரயோகித்தல்
18. ஆய்வு முறைமையியல் மற்றும் இணையத்தள ஆய்வு முறைமையியல்
19. மாற்று முரண்பாட்டுத் தீர்வு
20. ஆளுமை மற்றும் திறன்கள் விருத்தி
21. சுகாதார விருத்தி மற்றும் அழுத்த முகாமை
22. நடைமுறைப் பயிற்சி- தீர்ப்பு எழுதுதல் பயிற்சி, பிரச்சினைகளைத் திட்டமிடுதல், குற்றங்களை வயைறுத்தல், அடையாள அணிவகுப்புக்கள், மரண விசாரணைகளை

நடாத்தல், குற்ற ஒப்புதல்கள் மற்றும் கூற்றுக்களைப் பதிவு செய்தல், விசாரணைக் குறிப்புக்களைத் தயாரித்தல்.

## உள்ளடங்குகின்ற பயிற்சி முறைகளின் வகைகள்

1. மத்தியமயப்படுத்தப்பட்ட நேருக்கு நேர் முறை
2. பண்முகப்படுத்தப்பட்டÆமாகாண அடிப்படையில் அமைந்த நேருக்கு நேர் முறை
3. நீதிமன்ற அடிப்படையில் அமைந்த ஆலோசனை வழங்கும் முறை
4. நியமிக்கப்பட்ட ஆலோசகர் மூலம் (நியமிக்கப்பட்ட வளவாளர்கள்) மத்தியமயப்படுத்தப்பட்ட நேருக்கு நேர் முறை
5. தனிப்பட்ட அலுவலர்களுக்கான மூடிய முறைமை.
6. தகவல் தொழிநுட்பம் மற்றும் இணைய அடிப்படையிலான தொலைதூரக் கற்கை முறைகள்.
7. நாளாந்தம் பணிபுரிகின்ற கருவிகள், நீதிமன்ற ஆசனப் புத்தகங்கள் காணொலி பதிவு செய்யப்பட்ட கல்விப்பொருட்கள்.
8. பாட அலகுகள்.
9. கற்கை நெறிப்பொருட்கள்
10. குறிப்புப் பொருட்கள்
11. ஆய்வுப் பத்திரங்கள்.
12. காணொலி கலந்துரையாடல்
13. நடைமுறை- முறைகள்- வாதிக்கக் கூடிய நீதிமன்றங்கள்.
14. வருகைகள்
15. முன்வைப்புக்கள்
16. கட்டுரை எழுதுததல்.
17. ஆய்வுப்பணி
18. தனிப்பட்ட கற்கைப் பொருட்களைத் தயாரித்தல்.
19. வெளிநாட்டு பயிற்சி முறைகள்.
20. ஆலோசனை வழங்கள்.


ஆலோசனை வழங்களில் இரு வகை நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன, பிரதம நீதிபதியினால் நீதிமன்ற அடிப்படையிலமைந்த ஆலோசனை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் வளவாளர்களினால் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆலோசனை வழங்குகின்ற நிகழ்ச்சி. ஏதேனும் உத்தியோகபூர்வ அங்கீகாரம் இல்லாமல் ஒரு தனிப்பட்ட மட்டத்தில் பயிற்சியாக இந்த நாட்டில் ஆலோசனை வழங்கள் பயன்படுத்தப்படுகின்றது என்பது பொதுவான அறிவாகும். எவ்வாறாயினும், புதிய பயிற்சிக் கைநூலானது ஒரு ஆலோசனைப் பயிற்சியை அறிமுகம் செய்கின்றது. ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் அல்லது மேன்முறையீட்டு நீதிபதிகள், ஆலோசனை நீதித்துறை அலுவலர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள் போன்றவர்களிலிருந்து 2 சிறந்த வளவாளர்களினால் அத்தகைய ஆலோசனை நிகழ்ச்சி நடாத்தப்படும். ஆலோசகர்கள் பின்வரும் பணிகளைக் கையாள்வர்:

(1) குற்றவியல் சட்டம் மற்றும் சான்று- ஆரம்ப மற்றும் மேன்முறையீடுகள்- ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி -1 ஆலோசகர்.

(2) குடியியல் சட்டம் மற்றும் தொழில் சட்டம்- ஆரம்ப மற்றும் மேன்முறையீடுகள் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி -1 ஆலோசகர்.

இந்த வகை பயிற்சி முறை பிரதானமாக ஏற்கனவே ஆயத்தப்படத்தப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல்கள், இணைய அடிப்படையிலான முறைகள் அத்தோடு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட நேருக்கு நேர் நிறுவன அமர்வுகள் என்பவற்றின் ஊடாக நடாத்தப்படும்.

21. இ-நூலகம்





## 9. 2013 ஒரு பார்வை

**2013 இல் நிறுவகம்**

- ❖ நீதியமைச்சின் கட்டடத்தில் புதிய பிரிவில் செயலகம் அமைக்கப்பட்டது.
- ❖ 1315 நீதித்துறை அலுவலர்களுக்கான மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள் ஆகியோருக்காக 26 சேவைக்காலக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.
- ❖ 67 மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.
- ❖ 105 தொழில் நியாய சபைத் தலைவர்களுக்காக 3 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.
- ❖ வழக்கு முகாமை, இலத்திரனியல் வங்கி முறை மற்றும் இலத்திரனியல் தொடர்புகள் என்பவற்றில் 217 நீதித்துறை அலவலர்களுக்காக 3 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- ❖ இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது www,judgesinstitute.lk
- ❖ இ-நூலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது www,judgesinstitute.lk-e-library
- ❖ முகாமை சேவைகள் திணைக்களத்தினால் நிறுவகத்தின் பதவியணி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ காணொலி கலந்துரையாடல் வசதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- ❖ கேட்போர் கூடத்தின் குளிரேட்டி வசதி பூரணமாக சீரமைக்கப்பட்டுள்ளது.
- ❖ பயிலுனர் நீதித்துறை அலுவலர்களின் உதவியுடன் கற்கைநெறிக்கான பொருட்கள் மற்றும் குறிப்புப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன.
- ❖ அறிக்கையிடப்படாத உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நிதிமன்றத் தீர்ப்புக்கள் சேகரிக்கப்பட்டு குறிப்புக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.
- ❖ நிறுவகத்தின் பெருகைக் குழு தாபிக்கப்பட்டு பல கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.
- ❖ நீதித்துறை அலுவலர்களுக்கிடையில் கைநூல் மற்றும் குறிப்புப் பொருட்கள் என்பவற்றின் 750 கணனி அச்சுப்பிரதிகள் மற்றும் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன.
- ❖ குறிப்பெடுக்கின்ற நூலகம் நவீனமயப்படுத்தப்பட்டது.
- ❖ மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் விரிவாக்கப்பட்டன.
- ❖ கூட்டுருத்திட்டம் செயல் திட்டம் திருத்தப்பட்டன.
- ❖ வெளிநாட்டு நீதிபதி ஒருவரினால் விசேட விரிவுரை ஒன்று நடாத்தப்பட்டது.
- ❖ வெளிநாட்டுப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரினால் விசேட விரிவுரை ஒன்று நடாத்தப்பட்டது.
- ❖ நீதிபதிகளின் பயிற்சிக் கைநூல் தயாரிக்கப்பட்டது.
- ❖ நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் உறுப்புரிமை பெற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ வொஷிங்டனில் நடைபெற்ற 6 ஆவது நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச மாநாட்டில் பங்கேற்பு.
- ❖ நூலகத்தையும் தொழிநுட்ப அடிப்படையிலமைந்த பயிற்சி நிகழ்ச்சிகளையும் மேம்படுத்துவதற்கு இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- ❖ மலேசிய நீதித்துறைப் பயிற்சி நிறுவனம் மற்றும் போபால் நகரில் உள்ள இந்திய நீதித்துறை கல்வி நிறுவனம் என்பவற்றில் 80 நீதிபதிகளுக்காக 2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- ❖ குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டத்தொகுப்பு கொள்வனவு செய்யப்பட்டு சகல நீதிவான்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.
- ❖ நூலகத்துக்கு சட்ட அறிக்கைகள் கொள்வனவு செய்யப்பட்டன.

# 10. 2013.01.01 முதல் 2013.12.31 வரையான காலத்துக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகள்

**1. சேவையில் உள்ள நீதிபதிகளுக்கான சனிக்கிழமை நிகழ்ச்சிகள்**

67 மேல் நீதிமன்ற நீதிபதிகள், 1315 நீதித்துறை அலுவலர்கள் மற்றும் 70 தொழில் நியாய சபைத் தலைவர்களின் பங்களிப்புடன் 2013.01.01 முதல் 2013.12.31 வரை காலத்துக்கான சனிக்கிழமை கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. 2013 இல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பிரதான செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டள்ளன.

பின்வருமாறு 26 சனிக்கிழமை நிகழ்ச்சிகள் நீதிவான்களுக்கும் மாவட்ட நீதிபதிகளுக்கும் நடாத்தப்பட்டன.

| இல. | திகதி | பேச்சாளர் | தலைப்பு | நீதிபதிகள் |
|---|---|---|---|---|
| 1 | 2013.01.12 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் ஆவணச்சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 53 |
| 2 | 2013.01.19 | கௌரவ நீதிபதி சலீம் மர்சூப் உயர் நீதிமன்ற நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் இலத்திரனியல் சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 47 |
| 3 | 2013.02.09 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் ஆவணச்சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 55 |
| 4 | 2013.02.16 | கௌரவ நீதிபதி ஏ.டப்லியு.ஏ.ஸலாம் மேன்முறையீட்டு நீதி மன்றம் | குடியியல் நடைமுறைகளில் முன்-விளக்கப் படிமுறைகள் | 48 |
| 5 | 2013.03.02 | கௌரவ நீதிபதி ஏ.டப்லியு.ஏ.ஸலாம் மேன்முறையீட்டு நீதி மன்றம் | குடியியல் நடைமுறைகளில் முன்-விளக்கப் படிமுறைகள் | 47 |
| 6 | 2013.03.09 | கௌரவ நீதிபதி சலீம் மர்சூப் உயர் நீதிமன்ற நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் இலத்திரனியல் சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 49 |
| 7 | 2013.03.23 | திரு புவனேக அலுவிஹாரெ பிரதி மன்றாடியார் அதிபதி | செவிவழிச் செய்திகள் மற்றும் விதிவிலக்குகளுக் கெதிரான சட்டவிதி | 53 |
| 8 | 2013.03.30 | திரு புவனேக அலுவிஹாரெ பிரதி மன்றாடியார் அதிபதி | செவிவழிச் செய்திகள் மற்றும் விதிவிலக்குகள் | 53 |
| 9 | 2013.05.04 | கௌரவ நீதிபதி சலீம் மர்சூப் உயர் நீதிமன்ற நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் இலத்திரனியல் சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 55 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 2013.06.01 | கௌரவ நீதிபதி K.T. சித்ரசிரி மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதி | பணத்தை மீட்டுக்கொள்தல் தொடர்பான நியதிச்சட்டங்கள் | 47 |
| 11 | 2013.06.08 | கௌரவ நீதிபதி K.T. சித்ரசிரி மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதி | பணத்தை மீட்டுக்கொள்தல் தொடர்பான நியதிச்சட்டங்கள் | 44 |
| 12 | 2013.06.15 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிபதி | நிதிமன்றங்களின் நிருவாகம் மற்றும் ஒழுக்காற்று நடைமுறை | 51 |
| 13 | 2013.06.22 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிபதி | நிதிமன்றங்களின் நிருவாகம் மற்றும் ஒழுக்காற்று நடைமுறை | 54 |
| 14 | 2013.07.06 | கௌரவ நீதிபதி சந்த்ரா ஏகநாயக உயர் நீதி மன்ற நீதிபதி | குடியியல் வழக்குகளில் தீர்ப்புக்கள் எழுதுதல் | 52 |
| 15 | 2013.07.13 | கௌரவ நீதிபதி சந்த்ரா ஏகநாயக உயர் நீதி மன்ற நீதிபதி | குடியியல் வழக்குகளில் தீர்ப்புக்கள் எழுதுதல் | 44 |
| 16 | 2013.08.03 | கௌரவ நீதிபதி ஷிராணி திலகவர்த்தன உயர் நீதி மன்ற நீதிபதி | குடும்ப வன்முறைச்சட்டம் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் | 55 |
| 17 | 2013.08.31 | கலாநிதி விக்ரம வீரசூரிய | மூன்றாம் திறத்தவர் வாகனக் காப்புறுதி மற்றும் சட்டப் பிரச்சினைகள் | 45 |
| 18 | 2013.09.07 | திரு விஜித் மலல்கொட மேலதிக மன்றாடியார் அதிபதி | நச்சுப்பொருட்கள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் சட்டம் என்பவற்றின் கீழ் சட்டப்பிரச்சினைகள் | 51 |
| 19 | 2013.09.14 | கலாநிதி விக்ரம வீரசூரிய | மூன்றாம் திறத்தவர் வாகனக் காப்புறுதி மற்றும் சட்டப் பிரச்சினைகள் | 50 |
| 20 | 2013.09.21 | திரு விஜித் மலல்கொட மேலதிக மன்றாடியார் அதிபதி | நச்சுப்பொருட்கள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் சட்டம் என்பவற்றின் கீழ் சட்டப்பிரச்சினைகள் | 54 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 2013.10.05 | கலாநிதி கே.எம்.கருனாரத்ன | புலமைச் சொத்தின் குற்றவியல் வலுவாக்கம் | 51 |
| 22 | 2013.10.12 | கலாநிதி ருவன் இல்லேபெரும | குற்றப்புலனாய்வுகளில் மரபணு (DNA) தொழிநுட்பம் | 54 |
| 23 | 2013.10.19 | கௌரவ நீதிபதி சலீம் மர்சூப் உயர் நீதிமன்ற நீதிபதி | நீதிமன்ற நடவடிக்கைகளில் இலத்திரனியல் சான்றின் அங்கீகரிக்கத்தக்க தன்மை | 52 |
| 24 | 2013.10.26 | கலாநிதி ருவன் இல்லேபெரும | குற்றப்புலனாய்வுகளில் மரபணு (DNA) தொழிநுட்பம் | 50 |
| 25 | 2012.11.23 | கலாநிதி கே.எம்.கருனாரத்ன | புலமைச் சொத்தின் குற்றவியல் வலுவாக்கம் | 54 |
| 26 | 2012.12.07 | கலாநிதி கே.எம்.கருனாரத்ன | புலமைச் சொத்துச் சட்டம் | 45 |
| மொத்தம்-26 | | | | 1315 |

## செயலமர்வுகள்

2013 ஆகஸ்ட் 08 – 10 வரை ஈடன் கார்டன்ஸ் ஹோட்டலிலும் 2014 ஆகஸ்ட் 16 – 18 வரை அலுத்கம, களுவாமோதரை ஈடன் ரிஸோர்ட் என்ட் ஸ்பா ஹோட்டலிலும் 91 நீதித்துறை அலுவலர்களுக்காக செயற்திறனான வழக்கு முகாமை மற்றும் சட்டங்களின் தாமதங்களைத் தவிர்த்தல் என்பவற்றுக்காக நவீன நடைமுறைகள் என்ற தலைப்பில் 2 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. கொழும்பு, மிலோதா மண்டபத்தில் 2013.11.30 அம் திகதி 126 மாவட்ட நீதிபதிகளுக்காக இலத்திரனியல் வங்கி முறை மற்றும் இலத்திரனியல் ஒப்பந்தங்கள் தொடர்பாக ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டது.

## வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நீதித்துறை ஒழுக்கவியல், நீதிமன்ற நிருவாகம், வழக்கு முகாமை, மற்றும் நீதிமன்றத்தின் தன்னியக்கம் மற்றும் செயற்திறனான நீதிமன்ற மற்றும் வழக்கு முகாமைக்காக நீதித்துறை திறன்களை இஸ்திரப்படுத்துதல் என்பவற்றில் பங்குபற்றுபவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக 2014 ஒக்டோபர் 28 முதல் நொவம்பர் 01 ஆம் திகதி வரை மலேசியாவில் நீதித்துறை மற்றும் சட்டப் பயிற்சி நிறுவனத்தில் (ILKAP) 39 இலங்கை நீதிபதிகளுக்காக ஒரு வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.


## 11.வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வெளிநாட்டு வளவாளர்களினால் விசேட விரிவுரைகள்

இலங்கை நிதிபதிகள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் "மிகச் செயற்திறனான நீதிமன்ற முகாமை தொடர்பாக அவுஸ்திரேலியாவில் தற்போதுள்ள நடைமுறைகள்" மற்றும் "வழக்கு முகாமையில் அண்மைய மேம்பாடுகள்" என்ற தலைப்பில் கொழும்பு நீதித்துறை வலயத்தில் உள்ள 60 நீதிபதிகளுக்கு அவுஸ்திரேலிய பெடரல் சர்கிட் நீதிமன்றத்தின் நீதிபதி மைகல் பவ்மான் அவர்களால் 2013.09.16 ஆம் திகதி விரிவுரை ஒன்று நடாத்தப்பட்டது.



"வணிகச்சட்டத்தின் சூழமைவில் போட்டிச்சட்டத்தின் அபிவிருத்தி" என்ற தலைப்பில் கொழும்பு வலய 44 நீதிபதிகளுக்கு முன்வைப்பொன்று எஸெக்ஸ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி போல் ஹியூஜ்ஸ் அவர்களால் 2014.10.04 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இலங்கை நிதிபதிகள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் "வழக்கு முகாமையில் அண்மைய மேம்பாடுகள்" என்ற தலைப்பில் கொழும்பு வலய நீதிபதிகள் முன்னிலையில் குவீன்ஸ்லாந்து உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஜோன் முரி அவர்கள் 2013.10.04 ஆம திகதி உரையாற்றினார்.



## 12. ஆய்வுச் செயற்பாடுகள்

### 01. குடியியல் நீதி முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக சட்ட மறுசீரமைப்புக்கள்

இந்தக் காலகட்டத்தில் இலங்கையில் நீதித்துறையில் குடியியல் சட்டச் சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில் பரிந்துரைகளுடன் கூடிய இற்றைப்படுத்தப்பட்ட ஒரு ஆய்வுப்பத்திரம் தயாரிக்கப்பட்டு கௌரவ பிரதம நீதியரசர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் வழிகாட்டி நிறுவகத்தின் இணையத்தளத்தில் உள்ளது. (www.judgesinstitute.lk) குடியியல் நிதி முறைமையின் நவினமயப்படுத்தலுக்கான பரிந்துரைகளின் சுருக்கம் பின்வருமாறு;

அ) வழக்குகள் துரிதமாகவும் நியாயமானதாகவும் கையாளப்படுவதை உறுதி செய்தல்.

ஆ) செலவைக்குறைத்து வழக்கு நடவடிக்கைகளின் தாமதங்களைக் குறைத்தல்.

இ) நீதிமன்ற அடிப்படையில் அல்லது நீதிமன்றத்துக்கு வெளியே தீர்வுக்கு வருவதை ஊக்குவித்தல்.

ஈ) திறத்தவர்களை மாற்றுப் பிணக்குத் தீர்மானத்துக்கு (ADR) வருவதற்கு ஊக்குவித்தல்.

உ) செயற்திறனான வழக்கு முகாமைப் பொறிமுறைக்காக தாமதங்களைத் தவிர்ப்பதற்கு தற்போதைய நடைமுறைகளை மேம்படுத்தல்; மற்றும்

ஊ) குடியியல் நீதி முறைமையில் புதிய சட்டவாக்க மற்றும் நடவடிக்கை ரீதியான சட்டவிதிகள் மற்றும் நியதிகள் என்பவற்றை அறிமுகம் செய்தல்.

எ) நீதிமன்ற நடவடிக்கைகளில் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்.

ஏ) குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையைத் திருத்துதல்.

ஐ) அழைப்பாணைகளை சேர்ப்பிப்பதற்கு பதிவுத்தபால், குரியர் சேவைகள் அல்லது ஆவணங்களை பரிமாற்றுகின்ற எவையேனும் வேறு வழிகளில் சேர்ப்பிப்பதற்கான முறையை அறிமுகம் செய்தல் (தொலைநகல் அல்லது முதலிடத்தில் மின்னஞ்சல் சேவை மற்றும் தங்கியிருக்கின்ற குடும்பத்தின் மூத்த உறுப்பினரிடம் அழைப்பாணையை சேர்ப்பிப்பதற்கு கரிசனை கொள்தல் உட்பட)

ஒ) எதிராளியின் பதிலளிப்புக்கான காலவரையை அறிமுகம் செய்தல்.

ஓ) (அ) ஏற்புடைய வழக்குகளில் தீர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகளை ஆலோசிப்பதற்கு நீதிமன்றத்தின் உரிமை உட்பட தீர்வு, உடன்பாடு அல்லது ஏனைய உடன்படிக்கைக்கு வருவதற்கு திறத்தவர்களுக்கு உதவி செய்வதற்கு (ஆ) நிலவுகின்ற சட்டங்களின் கீழ் சனசமுக மத்தியஸ்தம் அல்லது வணிக மத்தியஸ்தம் போன்ற நீதிமன்ற உதவியளிக்கப்பட்ட அல்லது நீதிமன்றக் குறிப்பீட்டு மத்தியஸ்தம் போன்ற முறையில் மாற்றுப் பிணக்குத் தீர்வுக்கு முயற்சிப்பதற்கு; மற்றும் (இ) ஒரு திறத்தவருக்கு வழக்கை வெற்றி பெறுகின்ற அல்லது உரிமைக்கோரிக்கையை அல்லது பிரச்சினையை எதிர்வாதம் புரிகின்ற வாய்ப்பு உண்மையில் இல்லாதவிடத்து சுருக்கமுறை தீர்ப்புக்கான முதல்நிலை விசாரணையானது மேலும் நீடிக்கப்படுவதற்கும் முன் விளக்கத்துக்கான நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்தல்.

ஔ) மூல சத்தியக்கடதாசியினால் காப்பீடு செய்யப்படாத விளக்கத்தின் போது சத்தியக்கடதாசிகள் சமர்ப்பிக்கப்படாமல் அல்லது புதிய விடயங்கள் எழாத போது நீதிபதிக்கு தனித்தற்றுனிபைப் பிரயோகிப்பதற்கான உரிமை வழங்குகின்ற ஏனைய பாதுகாப்புக்கள் மற்றும் வரையறைகள் என்பவற்றைப் பொறுத்து பிரதான வாய்மொழி விசாரணைக்காக சத்தியக்கடதாசிச் சான்று பெறப்பட வேண்டும்.

க்) தற்போதிருக்கின்ற 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டத்தை இரத்துச் செய்துவிட்டு, வணிக மத்தியஸ்த நிலையத்துக்கு வணிகப் பிணக்குகளின் விதப்புரைக்கான ஏற்பாடுகளை உருவாக்குகின்ற மற்றும் ஏனைய பாதுகாப்புக்களுடன் சட்டத்தில் வலுவாக்கப் பொறிமுறைக்காக இடமளிப்பதற்கும் இலங்கை வணிக மத்தியஸ்த நிலையம் என்ற ஒரு புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

க) வணிக மத்தியஸ்தங்களை நடாத்துவதற்காக ஏற்பாடுகளை உருவாக்குதல், மத்தியஸ்தர்களாக சட்டத்தரணிகள் மற்றும் ஏனைய துறைசார் வல்லுனர்களுக்காகவும் ஏற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் வெளியிடங்களில் வணிகப்பிணக்குகளைத் செயற்திறனாகத் தீர்த்துக்கொள்வதற்காக வெளியிடங்களில் வணிக மத்தியஸ்த கிளைகளை தாபிப்பத்தல்.

கா) சகல முதல் நிலை நீதிமன்றங்களாலும் பின்பற்றப்பட வேண்டிய அடையாளம் காணப்பட்ட பிரதேசங்கள் மீது நடைமுறை வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல்.

கி) (வழக்குப் பாய்ச்சல் மற்றும் நாளாந்த நடவடிக்கைகள் என்பவற்றின் தரவு உட்செலுத்துல், குறிப்புக்கள் எடுத்தல், அழைப்பாணை பிறப்பிக்கின்ற வழக்குகள், குறிப்பீட்டு நோக்கங்களுக்காக மற்றும் நீதிமன்ற ஊழியர்களினால் நீதிமன்ற நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காக ஒலிப்பதிவுக் கருவிகளைப் பாவிப்பதை அனுமதிப்பதன் மூலம்) நீதிமன்ற நடவடிக்கைமுறைகளில் (கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் டெப்லட் கணனிகள் போன்ற) கணனிகளைப் பாவிப்பதற்கு சட்டத்தரணிகள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் போன்றோரை அனுமதிப்பதன் மூலம் முதல் நிலை நீதிமன்றங்களில் தொழிநுட்பத்தைப் பாவித்தல்.

கீ) ஆரம்பத்தில் உயர் நீதிமன்றம், வணிக மேல்நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும் இலத்திரனியல் கோவையிடல் முறைமையை அறிமுகம் செய்தல்.


கு) பிரதான வணிகப்பிரதேசங்களில் வணிக மேல் நீதிமன்றங்களை தாபித்தல்.

மேற் சொல்லப்பட்ட பரிந்துரைகளின் சிலவற்றை எளிதாக்குவதற்காக, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைக்கு வரைவு திருத்தமொன்று தயாரிக்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்ட சில ஆலோசனைகளைக் கூட்டிணைப்பதற்கு சமர்ப்பிக்கப்ட்டுள்ளது. மேற் சொல்லப்பட்ட பரிந்துரைகளின் சிலவற்றை எளிதாக்குவதற்காக, 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வணிக மத்தியஸ்த நிலையச் சட்டத்துக்கு ஒரு புதிய வணிக மத்தியஸ்த சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கும் 2005 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க திருத்தம் தயாரிக்கப்பட்டு கௌரவ பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற் சொல்லப்பட்ட பரிந்துரைகளின் சிலவற்றை எளிதாக்குவதற்காக, தாமதங்களைக் குறைத்தல், சில விசேட வழக்குகளில் திறத்தவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோர்களினால் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதையும் நோக்காக் கொண்டு 3 நடைமுறை வழிகாட்டிகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- குடும்பப் பிணக்குகளின் நடைமுறை வழிகாட்டி
- பிரிவினை வழக்குகளின் மீது நடைமுறை வழகாட்டல்

- நீதிமன்ற நடவடிக்கை முறைகளில் இலத்திரனியல் கருவிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களையும் பயன்படுத்துவதற்கு நடைமுறை வழிகாட்டல்.




## 02) நீதிபதிகள் பயிற்சிக் கைநூல்

நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாற்றில் முதல் முறையாக ஒரு பரிபூரணமான பயிற்சிக் கைநூல் UNDP அமைப்பின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் கற்கை நெறிகள், பயிற்சி உள்ளடக்கங்கள், பயிற்சிமுறைகள் மற்றும் விபரமான பயிற்சிப் பாடவிதானம் என்பவற்றை இது உள்ளடக்கியுள்ளது. நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், 2013 இல் பயிற்சி அலகு வெளியிடப்படும். நிறுவகத்தின் (www.judgesinstitute,lk) இணையத்தளத்தில் பயிற்சிக் கைநூல் காணப்படுகின்றது.

இலங்கை நீதித்துறை எதிர் நோக்குகின்ற எதிர்கால சவால்களை கருத்தில் கொண்டு இலங்கை நீதித்துறை அலுவலர்களின் பயிற்சித் தேவைகள் வளர்ச்சிக்குப் பதிலளிப்பதற்கு நீதிபதிகள் நிறுவகத்தினால் நீதித்துறை அலுசலர்களுக்கான நீண்டகால பயிற்சிக் கைநூல் வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுள்ளது. குடியியல், குற்றவியல், வணிகவியல், மற்றும் குடும்பச்சட்டம் போன்ற பொருண்மைச் சட்டம் மற்றும் நீதித்துறை நிருவாகம், வழக்குச் சட்டமும் வழக்குப் பாய்ச்சல் முகாமையும், மாற்றுப் பிணக்குத் தீர்வு, திறன்கள் விருத்தி, ஆய்வு முறைமையியல், உள மற்றும் உடல் சுகாதாரம், தகவல் தொழிநுட்பம் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான ஏனைய

தலைப்புக்கள் வழங்குதல் போன்ற புதிய பயிற்சி வளங்களையும் கைநூலின் வளங்கள் பிரதிபலிக்கின்றன.

### 3) நீதிபதிகளின் கைநூலை இற்றைப்படுத்தல்

கடந்த 20 வருடங்களாக நீதிபதிகளின் கைநூல் இற்றைப்படுத்தப்படவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியும் ஆலோசகருமான நீதிபதி ரஞ்சித் ரணராஜா அவர்களின் வழிகாட்டலின் கீழ் கைநூலை இற்றைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 13. சர்வதேச ஒத்துழைப்பு

2014 நொவம்பரில் நிறைவேற்றுக் குழு அமைப்பின் தீர்மானத்தின் பயனால் நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் உறுப்புரிமையை இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பெற்றுக் கொண்டுள்ளது.



THE INTERNATIONAL ORGANIZATION FOR JUDICIAL TRAINING

IOJT

Certificate of Membership

Sri Lanka Judges' Institute

Sri Lanka

Has been approved and registered as a member of the

International Organization for Judicial Training

by virtue of the decision of the Organization's Executive Committee

Signed

Justice Eliezer Rivlin, President

Judge Yigal Mersel, Secretary-General

புலமைச் சொத்து உரிமைகள் மீது பயிற்சிக்கான இருவட்டுக்கள் மற்றும் புத்தகங்கள் பயிற்சிப் பொருட்கள் அனுப்புவதன் மூலம் உலக புலமைச்சொத்து அமைப்பின் உதவியும் நிறுவகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.



நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் பயிற்சி மாநாடு வொஷின்டனில் 2013 நொவம்பரில் நடைபெற்றது

2013 நொவம்பரில் சமஷ்டி நீதித்துறை நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரிகளை நிறுவகத்தின் உறுப்பினர்கள் சந்தித்து இரு நிறுவனங்களையும் பங்குடமையாக்கிக் கொள்வதற்கான சாத்தியம் பற்றி கலந்துரையாடினர். வழக்கு முகாமை தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதித்துறை நிலையத்தினால் பல பயிற்சிப் பொருட்கள் மற்றும் பயிற்சி இருவட்டுக்கள் என்பன நன்கொடையாக வழங்கப்பட்டன.




2013 நொவம்பரில் வொஷிங்டனில் சமஷ்டி நீதித்துறை நிலையத்தின் (நிருவாகப்) பணிப்பாளருடன் பணிப்பாளர்

## 14. எதிர்கால கற்கைநெறிகள்

- வழக்கு முகாமையும் மத்தியஸ்தமும்
- மொழிப் பயிற்சி
- மரபணுச் சான்று
- சட்ட மருத்துவ விஞ்ஞானம்
- வேற்றரசுக்கு ஒப்படைத்தல் சட்டம் Negation
- தவிர்ப்பும் மத்தியஸ்தமும்
- கடற்துறைச் சட்டம்
- மேன் முறையீட்டு நீதிமன்ற (மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை) சட்ட விதிகள்
- தீர்ப்பு எழுதுல்
- தண்டனைத்தீர்ப்பு வழிகாட்டல்கள்

## 15. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் கோட்பாடுகளுக்கேற்பவும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளரினால் அமைக்கப்பட்ட கணக்கீட்டு நியமத்துக்கு ஏற்பவும் தயாரிக்கப்படுகின்றன.

## 16. நன்றிகள்

பின்வருவோர் வழங்கிய உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

1. நீதியமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள்.
2. நீதி சேவை ஆணைக்குழு.
3. திறைசேரியின் செயலாளர் மற்றும் ஊழியர்கள்.
4. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி கருத்திட்டம் (UNDP)
5. கணக்காய்வு தலைமை அதிபதி மற்றும் அவரின் ஊழியர்கள்.
6. கணக்காய்வுக் கண்காணிப்பாளர் மற்றும் அவரின் ஊழியர்.
7. உயர் நீதிமன்ற பதிவாளர்.
8. மேன் முறையீட்டு நீதமன்றப் பதிவாளர்.
9. உயர் நீதிமன்றத்தின் மாஷல் அவர்கள்.

ருவான் பர்னாந்து
மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

2014 ஆகஸ்ட் 10

## 17. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2013.12.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

**<u>இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின்</u>**
**<u>2013.12.31 இல் உள்ளவாறான ஐந்தொகை</u>**

| | குறிப்புக்கள் | 2013 | | 2012 |
|---|---|---|---|---|
| | | ரூபா.சதம் | ரூபா.சதம் | ரூபா.சதம் |
| **<u>சொத்துக்கள்</u>** | | | | |
| நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை | 1 | | 6,047,338.40 | 536,298.76 |
| **<u>நடப்புச் சொத்துக்கள்</u>** | | | | |
| | | 8,000.00 | | 25,000.00 |
| இருப்பு (அலுவலக காகிதாகி) | | 247,300.99 | | 403,631.17 |
| சேமிப்புக் கணக்கு நிலுவை | | | | 501.04 |
| காசு 2012.12.31 இல் உள்ளவாறு | | | | |
| 2013.12.31 இல் வங்கியில் உள்ள காசு | | 156,217.35 | | |
| | | | 411,518.34 | |
| | | | 6,458,856.74 | 965,430.97 |
| **<u>நிதியீட்டம்</u>** | | | | |
| திரண்ட நிதி | 5 | | | 5,929,170.76 |
| சேர்க்கவும்/(கழிக்கவும்),மேலதிகம்/குறைபாடு | | 4,302,360.93 | | (5,340,625.79) |
| | | 2,131,220.81 | | |
| | | | 6,433.581.74 | |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | | | |
| கணக்காய்வுக்கட்டணத்துக்கான ஏற்பாடு | | | | 92,000.00 |
| முத்திரைத் தீர்வைக்கான ஏற்பாடு | | 24,800.00 | | |
| இலங்கை டெலிகொம் நிறுவனத்துக்கு | | 475.00 | | |
| சம்பவித்த செலவுகள் | | | 25,275.00 | 284,886.00 |
| | | | 6,458,856.74 | 965,430.97 |

மேலே தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கேற்பத் தயாரிக்கட்டுள்ளது.

………………………..

தாயாரித்தவர்
திரு.ஜி.மெத்தேகொடகே
கணக்காளர்(பதில் (கடமை)
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

……………………………

கௌரவ எம்.ஆர்.சி.பர்னான்டோ
பணிப்பாளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

**இலங்கை நீதிபதிகள் நிறுவகம்**

**தேறிய சொத்துக்களின் மாற்றங்களின் கூற்று**

| | குறிப்பிடப்பட்ட மூலதனம் | ஒதுக்கிய நிதி | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 2013.01.01 இல் உள்ளவாறான நிலுவை | | | | | 4,302,360.93 |
| வருடத்துக்கு கிடைக்கப்பெற்ற மூலதன உதவுதொகைகள் | | | | | |
| வருடத்தில் மிகை/(பற்றாக்குறை) | | | | | 2,131,220.81 |
| 2013.12.31 இல் உள்ளவாறான நிலுவை | | | | | 6,433,581.74 |

# 18. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கணக்கு

**இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கணக்கு**

| | குறிப்பு | 2013 | | 2012 |
|---|---|---|---|---|
| | | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் |
| **வருமானம்** | | | | |
| அமைச்சின் உதவுதொகை | | | 10,303,501.87 | 894,802.98 |
| சேமிப்புக் கணக்குகளிலிருந்து வட்டி | | | 11,470.32 | 15,843.08 |
| நிழற்பிரதி வருமானம் | 06 | | 8,592.00 | - |
| தங்குமிட வசதிகள் கட்டணம் | | | 4,000.00 | - |
| உயர் நீதிமன்றம் | | | 2,000.00 | - |
| மொத்த வருமானம் | | | 10,329,564.19 | 910,646.06 |
| **கழிக்க – செலவினம்** | | | | |
| சம்பளம் மற்றும் கூலிகள் ஊ.ந.நிÆஊ.சே.நி. உடன் | | 511,866.57 | | 888,081.24 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 70,723.82 | | 77,234.90 |
| கருத்தரங்கு படிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் | | 3,133,800.00 | | 3,316,050.00 |
| காரியாலய காகிதாகி செலவுகள் | | 468,890.58 | | 180,701.40 |
| ஓய்வூதிய பணிக்கொடை | | 167,800.00 | | - |
| பிரயாணச் செலவுகள் | | 2,240.00 | | - |
| எரிபொருள் | | 153,915.40 | | 262,500.00 |
| சீருடைக்கான கொடுப்பனவுகள் | | 4,000.00 | | 13,640 |
| ஏனைய விநியோகங்கள் | | 126,361.24 | | - |
| வாகனம் பராமரிப்பு | | 53,083.25 | | 535,498.27 |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு | | 151,297.38 | | - |
| தபால் மற்றும் தொடர்பாடல்Æஇணையத் தொடர்பு | | 495,692.68 | | 232,669.88 |
| துப்பரவாக்கல் மற்றும் ஏனைய சேவைகள் | | 2,299,527.00 | | 232,767.00 |
| வங்கிக் கட்டணம் | | 3,000.00 | | 750.00 |
| பெருமானத்தேய்வுக்கான ஏற்பாடு | 01 | 556.144.96 | | 12,555.25 |
| விரிவுரை படி | | - | | 195,000.00 |
| வாகனச் செலவுகள் | | - | | 299,323.91 |
| ஊழியர் நலன்புரி | | - | | 4,500.00 |
| | | | (8,198,343.38) | |
| திரட்டிய நிதிக்கான மிகை/குறை | | | 2,131,220.81 | (5,340,625.79) |

# 19. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

**இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று**

| | குறிப்பு | 2013 | | 2012 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் |
| அமைச்சின் உதவு தொகைகள் | | 10,303,501.87 | | 894,802.98 |
| உயர் நீதமன்றத்திலிருந்து திருப்பிச்செலுத்தப்பட்டது | | 2,000.00 | | - |
| நிழற் பிரதியெடுத்தல் வருமானம் | 6 | 8,592.00 | | - |
| தங்குமிட வசதிகள் கட்டணம் | | 4,000.00 | | - |
| செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான பணக் கொடுப்பனவு | | | 10,318,093.87 | |
| | 2 | 7,525,122.92 | | 6,293,213.10 |
| | 3 | 2,636,753.60 | | 191,272.25 |
| | | | (10,161,876.52) | (5,589,682.37) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் தேறிய காசுப்பாய்ச்சல் | | | 156,217.35 | |
| **முதலீட்டு நடவடிக்கைகள்**<br>சேமிப்புக் கணக்கிலிருந்து வட்டி | | 11,470.32 | | 15,843.08 |
| வட்டியை சேமிப்புக்கணக்குகளில் மீள்முதலீடு | | (11,470.32) | | (15,843.08) |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் தேரிய காசுப்பாய்ச்சல் | | | 0.00 | |
| காசு/காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகறிப்பு/ குறைவு | | | | |
| வருட ஆரம்பத்தில் காசு/காசுக்குச் சமமானவை | | | 0.00 | |
| | | | 156,217.35 | 5,590,183.41 |
| வருட இறுதியில் காசு/காசுக்குச் சமமானவை | | | 156,217.35 | 501.04 |

குறிப்பு 01 **இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நடப்புச் சொத்துக்கள் அல்லாதவைகள்**

| விளக்கம் | வருட ஆரம்பத்தில் கிரயம் | குறிப்பிட்ட வருடத்தில் சேர்க்கப்பட்டவை | வருடத்துக்கான பெறுமானத் தேய்வு | 2013.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு | தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 444,005.00 | 758,602.09 | 89,988.59 | 407,744.09 | 794,863.00 |
| தளபாடங்கள் | 1,141,549.50 | 627,390.51 | 117,683.32 | 188,186.81 | 1,580,753.20 |
| நூலகப் புத்தகங்கள் | 111,989.85 | 239,000.00 | 13,626.06 | 91,090.91 | 259,898.94 |
| கணினி உபகரணங்கள் | 3,044,496.00 | 695,515.00 | 316,041.51 | 507,890.51 | 3,232,120.49 |
| மின் உபகரணங்கள் | 85,639.00 | 31,360.00 | 10,654.56 | 10,654.56 | 106,344.44 |
| சமையலறைப் பொருட்கள் | 61,409.25 | - | 6,140.92 | 6,140.92 | 55,268.33 |
| பிரயாணப் பைகள் | 20,100.00 | - | 2,010.00 | 2,010.00 | 18,090.00 |
| | 4,909,188.60 | 2,351,867.60 | 556,144.96 | 1,213,717.80 | 6,047,338.40 |

2013 ஆம் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு

| | | | |
|---|---|---|---|
| 2013.01.01 | அலுவலக உபகரணங்கள் | 444,005.00x10% | 44,400.50 |
| 2013.04.30 | சேர்க்கைகள் | (556,233.09x10%)x9/12 | 41,717.48 |
| 2013.06.26 | சேர்க்கைகள் | (9,184x10%)x6/12 | 459.20 |
| 2013.09.02 | சேர்க்கைகள் | (11,500x10%)x4/12 | 383.33 |
| 2013.10.14>21 | சேர்க்கைகள் | (181,685x10%)x2/12 | 3,028.08 |
| | | | 89,988.59 |
| 81,798.59 | | | |
| 2013.01.01 | தளபாடம் | 1,141,549.50x10% | 114,154.95 |
| 2013.10.30 | சேர்க்கைகள் | (211,702.40x10%)x2/12 | 3,528.37 |
| 2013.12.11,20 | சேர்க்கைகள் | (415,688.11x10%)0/12 | - |
| | | | 117,683.32 |
| 2013.01.01 | நூலகப் புத்தகங்கள் | 111,989.85x10% | 11,198.98 |
| 2013.10.08 | சேர்க்கைகள் | (72,250x10%)x2/12 | 1,204.16 |
| 2013.11.19 | சேர்க்கைகள் | (146,750x10%)x1/12 | 1,222.92 |
| 2013.12.11 | சேர்க்கைகள் | (20,000x10%)x0/12 | - |
| | | | 13,626.06 |
| 2013.01.01 | கணினி உபகரணங்கள் | 3,044,496.00x10% | 304,449.60 |
| 2013.10.08 | சேர்க்கைகள் | (695,515x10%)x2/12 | 11,591.91 |
| | | | 316,041.51 |
| 2013.01.01 | மின் சாதனங்கள் | (85,639x10%) | 8,563.90 |
| 2013.04.29 | சேர்க்கைகள் | (31,360x10%)x8/12 | 2,090.66 |
| | | | 10,654.56 |

**குறிப்பு 02:** செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவினங்கள்

| | |
|---|---|
| சம்பளமும் கூலிகளும் | 511,866.57 |
| போக்குவரத்து | 2,240.00 |
| மேலதிக நேரக்கொடுப்பனவு | 70,723.82 |
| காகிதாகிகள் | 451,890.58 |
| எரிபொருள் | 153,915.40 |
| சீருடை | 5,000.00 |
| ஏனைய விநியோகங்கள் | 126,361.24 |
| படிகள் (கருத்தரங்கு மற்றும் பயிற்சி) | 3,133,800.00 |
| வாகனங்கள் பராமரிப்பு | 53,083.25 |
| பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு | 151,297.38 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 495,692.68 |
| ஏனைய சேவைகள் | 2,299,527.00 |
| வங்கிக் கட்டணங்கள் | 3,000.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 67,200.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 7,525,597.92 |
| (-) முத்திரைத் தீர்வைக்கான ஏற்பாடு | (475.00) |
| | 7,525,122.92 |

**குறிப்பு 03**

| | |
|---|---|
| காரியாலய தளபாடம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | 2,081,507.60 |
| பொறித்தொகுதி இயந்திரம் கொள்வனவு | 31,360.00 |
| நூலகப் புத்தகங்கள் கொள்வனவு | 239,000.00 |
| கணினி சேவர் கொள்வனவு | 284,886.00 |
| | 2,636,753.60 |

**குறிப்பு 04:**

நேரடி முறையில் நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது

**குறிப்பு 05: திரண்ட நிதிக்கான சீராக்கல்**

| | | |
|---|---|---|
| 2013.01.01 | அன்றுள்ளவாறான நிலுவை | 588,544.97 |
| சீராக்கல் | (I) 2012.12.31 காசு நிலுவை தவறு | (501.04) |
| | | 588,043.93 |
| | (II) கடந்த வருடத்தில் சீருடைப் படி | (1,000.00) |
| | | 587,043.93 |
| | (III) அமைச்சிலிருந்து கிடைத்த சொத்துக்கள் | 3,715,317.00 |
| | | 4,302,360.93 |

**குறிப்பு 06**

(I)அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட நிதி

| | |
|---|---|
| ஜனவரி | 1,744,176.78 |
| மார்ச் | 878,698.31 |
| ஏப்ரல் | 1,087,593.09 |
| ஜுன் | 918,379.91 |
| ஜுலை | 800,000.00 |
| செப்டெம்பர் | 1,963,514.78 |
| ஒக்டோபர் | 1,491,139.00 |
| நொவம்பர் | 100,000.00 |
| டிசம்பர் | 1,320,000.00 |
| | 10,303,501.87 |

(II) நிழற்பிரதி கட்டணம்

| | |
|---|---|
| பெப்ரவரி | 2,516.00 |
| மார்ச் | 1,603.00 |
| மே | 120.00 |
| ஜுன் | 1,175.00 |
| ஜுலை | 1,498.00 |
| ஆகஸட் | 140.00 |
| செப்டெம்பர் | 108.00 |
| ஒக்டோபர் | 1,020.00 |
| நொவம்பர் | 340.00 |
| டிசம்பர் | 72.00 |
| | 8,592.00 |

(III) உயர் நீதிமன்றத்திலிருந்து திருப்பித் தரப்பட்ட தொகை

| | |
|---|---|
| செப்டெம்பர் | 2.000.00 |

(IV) தங்குமிட வசதிகள் கட்டணங்கள்

| | |
|---|---|
| டிசம்பர் | 4,000.00 |

## 20. 2013.12.31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் பதிவுப்புத்தகத்தில் உள்ளவாறு

## 21. கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை 2013

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஜேபீ/சீ/எஸ்எல்ஜேஐ/01/13/06 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2014 நவம்பர் 28

பணிப்பாளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை நிறுவனத்தின் பணிப்பாளருக்கு 2014 நவம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நிறுவனத்திற்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், நூலகப் புத்தகங்கள், கணனிகள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் மின்னியல் பொருட்கள் அடங்கலாக சகல சொத்துக்களும் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தினை கருத்திற்கொள்ளாது ஆண்டிற்கு 10 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| i. நிதிப்பிரமாணம் 228 | குறித்த செலவினக் கணக்கின் விபரங்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் முகப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 1646 | நிறுவனத்தின் குழாம் வாகனங்களிற்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடுகளும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

3

(ஆ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்

| | |
|---|---|
| 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூலக/1 ஆம் இலக்க தேசிய நூலகங்கள் மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | நிறுவனத்தினால் நூலகப் புத்தகங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் படி மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 2,131,221 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,340,626 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 7,471,847 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது. மொத்தச் செலவினம் ரூபா 1,947,071 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 9,418,918 ஆல் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிசார் செயலாற்றல் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

ii. நிறுவனத்தின் பௌதீக செயலாற்றலின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இலக்குகளை அடைந்துகொள்ளல் கீழே தரப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி விடய இல. | விபரம் | இலக்குகள் நிதிசார் | இலக்குகள் பௌதீக | அடைவுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| 01 | புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,500,000 | 30 நீதிபதிகள் | நடாத்தப்படவில்லை |
| 03 | தொழில் நியாயசபைகளின் தலைவர்களிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (வை-பை இணையதள வசதி) | 808,000 | 385 தொழில் நியாயசபைக ளின் தலைவர்கள் | 105 தொழில் நியாயசபைகளின் தலைவர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டனர். |
| 05 | கேட்போர் கூடத்திற்கு குளியல் அறையினை நிர்மாணித்தல் | 1,000,000 | 2 அறைகள் | நடாத்தப்படவில்லை |
| 08 | கணனிகள் மற்றும் இணையத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு பாடநெறிகள் | 100,000 | 20 பாடநெறிகள் | நடாத்தப்படவில்லை |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இலக்குகளை அடைதல் மிகவும் நலிவான மட்டத்தில் இருந்தமை வெளிப்பட்டது.

**05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவின் படி, நிறுவனத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான கணக்குகள், நிதியாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 10 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தினது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) திட்டமிடல்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

6